மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
பயிற்சிப் பரீட்சை- மார்ச் 2019

தரம் 13 (2019) **வணிகக்கல்வி- 32-T-1** **இரண்டு மணித்தியாலம்**

அறிவுறுத்தல்கள்
- ❖ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ❖ 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

வினாத்தாள் 1

வினா இல	புள்ளிகள்
01-30	.....
30-50	.....
மொத்தம்	.....

01. வணிகங்களை உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில் முதலாம் நிலை, இரண்டாம் நிலை மூன்றாம் நிலை என வகைப்படுத்தமுடியும். அந்த வகையில் மூன்றாம் நிலை உற்பத்தியினை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) விவசாயம், கால்நடை, சுரங்கமறுத்தலும், கனிய அகழ்வும்
(2) உற்பத்திக் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில், சுரங்கமறுத்தலும், கனிய அகழ்வும்
(3) உற்பத்திக் கைத்தொழில், சுரங்கமறுத்தலும், கனிய அகழ்வும், நீர் சுத்திகரிப்பும் விநியோகமும்
(4) மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிரூட்டல் வழங்கல், நீர் சுத்திகரிப்பும் விநியோகமும், உணவு குடிபானம் வழங்கல்
(5) விவசாயம், கால்நடை, காட்டுவளம், மீன்பிடித்தொழில் (.....)

02. வணிகக் தொழிற்பாடுகள் சில X நிரலிலும், அவற்றிற்குப் பொருத்தமான உதாரணங்கள் சில Y நிரலிலும் தரப்படுகின்றன.

X தொழிற்பாடுகள் (Function)	Y உதாரணங்கள் (Example)
1. நிர்வாகம் 2. உற்பத்தி 3. சந்தைப்படுத்தல் 4. நிதி 5. மனித வளக் கருமம்	A. தரக்கட்டுப்பாடு B. விளம்பரம் C. ஊழியர் கோவை தயாரித்தல் D. ஊழியர்களைப் பயிற்றுவித்தல் E. மூலதனத்தை ஈடுபடுத்தல்

X நிரலில் காட்டப்பட்டுள்ள வணிகத் தொழிற்பாடுகளுக்குப் பொருத்தமான Y நிரலிலுள்ள உதாரணங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) A, C, D, E, B (2) B, C, A, E, D (3) C. A, B, E, D (4) C, A, B, D, E (5) D, A, E, B, C(.....)

03. பின்வருவன வணிகம் ஒன்று தொடர்பான சூழல்சார் காரணிகளது சில போக்குகள் ஆகும்.
A. திறமையான, அனுபவமுள்ள ஊழியர் காணப்படல்
B. நுகர்வாளரது அறிவு, அவர்களது வருமானம் அதிகரித்தல்
C. வயது முதிர்ந்த சனத்தொகை அதிகரித்துச் செல்லல்
D. புதிய போட்டியாளர் சந்தைக்கு வருதல்
E. அரசியலின் நிலையற்றதன்மை
F. தொழில் தருநர், தொழில் பெறுநர் முரண்பாடுகளில் அதிகரிப்பு
G. வழங்குநர் தரமான பொருட்களை வழங்கல்
H. கடன்களுக்கான வட்டிவீதம் அதிகரிப்பு
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அண்மிய சூழல் (வேலைச் சூழல்) காரணிகளின் வாய்ப்புக்களை மட்டும் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
(1) C, E, F (2) A, F (3) B, D, G (4) C, E. F (5) B. G (.....)

04. வணிகமொன்று சூழலின் நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களில் உள்ளடங்காதது எது?
(1) வளப்பயன்பாடு
(2) பூரண வேலைவாய்ப்பு
(3) மூலப்பொருள்களும், கழிவுப்பொருள் முகாமைத்துவமும்
(4) இடர் முகாமைத்துவம்
(5) இயற்கையானதும், கலாசார வடிவமைப்புகளும் (.....)

05. அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்துகின்ற முறைகளும் அவற்றிற்கான உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

செல்வாக்குச் செலுத்தும் முறை	உதாரணம்
A. உட்கட்டமைப்பு வசதி வழங்கல்	❖ தனியார் துறைக்கு போட்டியாக அரச துறை நிறுவனங்களை உருவாக்கல்
B. போட்டியாளராகச் செயற்படல்	❖ தனியார்துறைக்குச் சமமானதாக வியாபார நிலையங்களை நிர்மாணித்து வாடகைக்கு விடல்
C. வாடிக்கையாளராகச் செயற்படல்	❖ விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்தல்
D. கொள்கைகளை உருவாக்கல்	❖ மின்சார வசதி மற்றும் வீதிப்பராமரிப்புகளை மேற்கொள்ளல்

அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறையையும், அதற்கான உதாரணங்களையும் சரியாகக் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

(1) B, C (2) A, B (3) A, C (4) C, D (5) A, D (.....)

06. அரசினால் அறவிடப்படும் நேர்வரிகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) வருமான வரி, மூலதன இலாபத்தின் மீதான வரி, சுங்க வரி, உற்பத்தி வரி
(2) சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி, சுங்க வரி, நிறுத்தி வைத்தல் வரி, கம்பனி வரி
(3) சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி, சுங்க வரி, உற்பத்தி வரி, வருமான வரி
(4) சுங்க வரி, உற்பத்தி வரி, நிறுத்தி வைத்தல் வரி, மூலதன இலாபத்தின் மீதான வரி
(5) நிறுத்தி வைத்தல் வரி, மூலதன இலாபத்தின் மீதான வரி, வருமான வரி, கம்பனி வரி (.....)

07. பின்வரும் வணிக வகைகளுள் தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையற்ற, தனியொருவரால் ஆரம்பிக்கப்பட முடியாத வணிக அமைப்பு எது?
(1) தனியுடைமை வணிகம்
(2) பங்குடைமை வணிகம்
(3) கூட்டுறவு
(4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
(5) அங்கீகார வணிகம்
(.....)

08. அங்கீகாரம் வழங்குபவரின் பெயரிலும், முறையிலும் வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு அங்கீகாரம் பெறுபவருக்கு உரிமையினை ஒப்படைக்கின்ற அங்கீகார வணிக வகையைக் காட்டும் விடையினைத் தெரிக.
(1) உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம்
(2) IOC கனிய எண்ணெய் நிரப்பு நிலையம்
(3) உற்பத்தி அங்கீகார வணிகம்
(4) கொகா கோலா, பெப்சி கோலா குளிர்பான உற்பத்தி நிறுவனம்
(5) வணிக முறைக்கான அங்கீகார வணிகம் (.....)

09. உதயன் என்பவர் தன்னிடம் காணப்பட்ட வடிவமைப்புத் திறனை சரியாக இனங் கண்டதன் மூலம் ஆடை வடிவமைப்புத் தொடர்பாக டிப்ளோமா பாடநெறி ஒன்றினை கற்று சிறிய ஆடைத்தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பித்து அதனை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார். இவர் தனக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களை சரியாக வழிப்படுத்தி, ஊக்கப்படுத்துவதுடன் தனது தொழில் சூழலுடன் தொடர்புடைய உள்ளக, வெளியகத் தரப்பினருடன் சிறந்த இடைத்தொடர்பினைப் பேணுகின்றார்.

மேலே தரப்பட்ட தகவலின்படி முயற்சியாளரின் திறனை விருத்தி செய்து கொள்வதற்கான முறைகளையும், முயற்சியாண்மைத் திறன்களையும் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) சுயமதிப்பீடு, கல்வி, தலைமைத்துவத் திறன், ஆளிடைத்தொடர்புத்திறன்
(2) பயிற்சி, அனுபவம், முகாமைத்துவத்திறன், தொடர்பாடல் திறன்
(3) சுயமதிப்பீடு, அனுபவம், முகாமைத்துவத்திறன், தலைமைத்துவத்திறன்
(4) பயிற்சி, சுயமதிப்பீடு, ஆளிடைத்தொடர்புத்திறன், தலைமைத்துவத்திறன்
(5) சுயமதிப்பீடு, கல்வி, ஆளிடைத்தொடர்புத்திறன், தலைமைத்துவத்திறன் (.....)

10. சிறிய, நடுத்தரளவு வணிகங்களை வரைவிலக்கணப்படுத்துவதற்கு அளவு, பண்பு ரீதியிலான காரணிகளை அடிப்படையாகக் கொண்ட நியதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் அளவு ரீதியிலான காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) மூலதனத்தின் அளவு, ஊழியர் எண்ணிக்கை, பயன்படுத்தும் தொழில்நுட்பம், சந்தையின் தன்மை
(2) பயன்படுத்தும் சக்தி, வருடாந்த புறழ்வு, வணிக ஒழுங்கமைப்பு முறை, சந்தையின் தன்மை
(3) பயன்படுத்தும் தொழில்நுட்பம், வணிக ஒழுங்கமைப்பு முறை, சந்தையின்தன்மை, ஊழியர் வினைத்திறன்
(4) மூலதனத்தின் அளவு, ஊழியர் எண்ணிக்கை, பயன்படுத்தும் சக்தி, வருடாந்த புறழ்வு
(5) மூலதனத்தின் அளவு, ஊழியர் எண்ணிக்கை, பயன்படுத்தும் தொழில்நுட்பம், ஊழியர் வினைத்திறன்
(.....)

11. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பாக சில செய்தித் தொகுப்புகள் கீழே தரப்படுகின்றன.

A. இலங்கையில் காணப்படும் மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ரூ 10 பெறுமதியான நாணயக்குற்றியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

B. தனியார் துறையை சேர்ந்த ஊழியர்களின் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மீதியின் 20% ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

C. மத்திய வங்கி வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதியை பின்வருமாறு வெளியிட்டுள்ளது.
ஐக்கிய அமெரிக்க டொலர் ரூ 140, யூரோ ரூ 145

D. வணிக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் பேணவேண்டிய ஒதுக்குவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்காட்டிய செய்தித் தொகுப்பிலிருந்து மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாட்டினை மட்டும் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) A, B (5) B. D (.....)

12. ஆதவன் என்பவர் இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் நடைமுறைக் கணக்கை பேணும் அதேவேளை சரவணன் என்பவர் மக்கள் வங்கியின் மாங்குளம் கிளையில் நடைமுறைக் கணக்கைப் பேணுகின்றார். ஆதவன் ரூ 100000 பெறுமதியான குறுக்கு கோடிட்ட காசோலையொன்றை சரவணனுக்கு வழங்கினார். சுரவணன் அக்காசோலையினை தனது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு சமர்ப்பித்தபோது வங்கியானது குறுக்கு கோடிட்டமை காரணமாக அக்காசோலையை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டு அக்காசோலையினை நிராகரித்தது. அக்காசோலை குறுக்குக் கோடிட்டிருந்த முறையினைக்காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

(1)	(2)	(3)
இலங்கை வங்கி – கிளிநொச்சி	பெறுவோன் கணக்கு மட்டும்	பெறுவோன் கணக்கு- இலங்கைவங்கி மாங்குளம்

(4)	(5)
கைமாறத்தகாதது	பெறுவோன் கணக்கு மட்டும் கைமாறத்தகாதது

(.....)

13. அருண் என்பவர் தான் வசிக்கும் வீட்டிற்காக ரூ 500000 இற்கு செலிங்கோ காப்புறுதிக் கம்பனியிடமிருந்து காப்புறுதிப் பத்திரமொன்றை பெற்றக்கொண்டதுடன், ரூ 1000000 இற்கு ஜனசக்தி கம்பனியிடமிருந்து மற்றுமொரு காப்புறுதிப் பத்திரத்தையும் பெற்றுள்ளார். வீடு சூறாவளி காரணமாக சேதமடைந்ததன் காரணமாக ஏற்பட்ட இழப்பு ரூ 300000 ஆகக் கணிப்பிடப்பட்டது. பங்களிப்புத் தத்துவத்தின் பிரகாரம் முறையே செலிங்கோ, மற்றும் ஜனசக்தி கம்பனிகளால் செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகையாக அமைவது,

(1) செலிங்கோ ரூ 100000, ஜனசக்தி ரூ 200000
(2) செலிங்கோ ரூ 200000, ஜனசக்தி ரூ 100000
(3) செலிங்கோ ரூ 200000, ஜனசக்தி ரூ 500000
(4) செலிங்கோ ரூ 200000, ஜனசக்தி ரூ 400000
(5) செலிங்கோ ரூ 500000, ஜனசக்தி ரூ 1000000

(.....)

14. வணிக செயற்பாடுகளின்போது பல்வேறு தொடர்பாடல் ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் அகரீதியான, இலத்திரனியல் அல்லாத, எழுத்து மூல ஊடகங்களை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, கருத்தரங்கு, அறிக்கை
(2) மெமோ, அறிவித்தல்கள், அறிவித்தல் பலகை, அறிக்கை
(3) கடிதம், பத்திரிகை, சுவரொட்டி, பதாகை
(4) இலத்திரனியல் அறிவித்தல் பலகை, இலத்திரனியல் தபால், கடிதம், சஞ்சிகை
(5) தொலைநகல், இலத்திரனியல் தபால், குறுஞ்செய்தி, அறிவித்தல் பலகை (.....)

15. போக்குவரத்து முறைகளில் அனுகூலம் மற்றும் பிரதிகூலங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

A) பெருமளவான பயணிகளையும், பொருட்களையும் ஒரே தடவையில் கொண்டு செல்ல முடிதல்
B) கட்டணம் குறைவாக இருத்தல்
C) தேவைப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சேவையினைப் பெற முடியாது
D) இறுதி வரை பயணிக்க முடியாது.

மேலே உள்ள பண்புகளை உள்ளடக்கிக் காணப்படக்கூடிய போக்குவரத்து முறையாக அமைவது,

(1) ஆகாய வழி போக்குவரத்து
(2) நீர் வழி போக்குவரத்து
(3) கடல் வழிப்போக்குவரத்து
(4) புகையிரத வழி போக்குவரத்து
(3) பெருந்தெரு போக்குவரத்து

(.....)

16. மொத்த வியாபாரம் தொடர்பில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருட்களை கொள்வனவு செய்து மொத்தமாக விற்பனை செய்தல்
(2) மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருட்களை கொள்வனவு செய்து சில்லறையாக விற்பனை செய்தல்
(3) இறுதி நுகர்விற்காக விற்பனை செய்யும் நோக்கத்துடன் பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்தல்
(4) மீள்விற்பனை செய்யும் நோக்கத்துடன் பொருட்களை கொள்வனவு செய்வதுடன் நுகர்வோருடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் வியாபாரத்தைக் குறிக்கும்.
(5) இறுதி நுகர்விற்காக பொருட்களை அல்லது சேவைகளை விற்பனை செய்வதற்காக பொருட்களை மொத்தமாக களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதனைக் குறிக்கும். (.....)

17. இறக்குமதி நடைமுறைகள் சில கீழே தரப்படுகின்றன.
A. விலை விசாரணைக் கடிதம் அனுப்புதல்
B. இறக்குமதி அனுமதிப் பத்திரம் பெறல்
C. வெளிநாட்டு வழங்குநர் ஒருவரை தெரிவு செய்தல்
D. விலைக் கூற்று பெறல்
E. பொருட்களைப் பெறல்
F. கட்டளை சமர்ப்பித்தல்
G. கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
இறக்குமதி நடைமுறைகளை சரியான ஒழுங்கில் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) A, C, E, F, B, D, G (4) A, C, E, G, F, B, D
(2) C, A, D, B, F, G, E (5) B, A, D, F, G, E, C
(3) C, A, D, F, B, E, G (.....)

18. ஹென்ரி மின்ற்ஸ் பேர்க் (Henry Mintz berg) என்பவரினால் வகைப்படுத்தப்பட்ட முகாமைத்துவ வகிபாகம் X நிரலிலும், அவற்றிற்கு பொருத்தமான உபவகிபாகங்கள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

X	Y
1. ஆளிடைத் தொடர்பு வகிபாகம் (Interpersonal Role) 2. தகவலளிப்பு வகிபாகம் (Informational Role) 3. தீர்மானமெடுத்தல் வகிபாகம் (Decisional Role)	A. தொடர்புகளைப் பேணுபவர் (Liaison) B. முயற்சியாளர் (Entrepreneur) C. உத்தியோகபூர்வ பேச்சாளர் (Spokes person) D. வளங்களை ஒதுக்கீடு செய்பவர்(Resource Allocator) E. தலைவர் (Leader) F. கண்காணிப்பாளர் (Monitor)

X நிரலில் தரப்பட்டுள்ள பிரதான வகிபாகங்களுக்கேற்ப Y நிரலில் உள்ள உப வகிபாகங்களை இணைக்கும்போது சரியான ஒழுங்குமுறையினைக் காட்டும் விடையாக அமைவது,
(1) 1- A, C 2- B, D 3- E, F (4) 1- B, F 2- A, D 3- B, D
(2) 1- A, E 2- D, B 3- C, D (5) 1- C, E 2- B, D 3- A, F
(3) 1- A, E 2- C, F 3- B, D (.....)

19. பாடசாலை அதிபர் ஒருவரினால் நாளாந்தம் நிறைவேற்றப்படும் கருமங்கள் சில கீழே தரப்படுகின்றன.
A. அதிதிகளை வரவேற்றல்
B. காலைக் கூட்டத்தில் உரையாற்றுதல்
C. இணைபாடவிதான செயற்பாடுகளில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டுதல்
D. ஆசிரியர் நலன்புரிச் சேவையினை திறன்பட வழங்குதல்
E. ஆசிரியர், மாணவர் கருமங்களை கண்காணித்தல்
F. ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பான சுற்றறிக்கை ஒன்றினை அனுப்புதல்
மேற்குறிப்பிட்ட கருமங்களுள் அதிபர் ஒரு தலைவர் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் கருமங்களை உள்ளடங்கும் தொகுதியாக அமைவது,
(1) A, C (2) D, E (3) E, F (4) C, D (5) A, E (.....)

20. முகாமைத்துவக் கருமத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) ஒழுங்கமைத்தல்:- எதிர்கால நிச்சயமற்ற நிலைமைகளுக்கும், உறுதியற்ற இயங்கு சூழலுக்கும் வெற்றிகரமாக முகம் கொடுக்க முடிதல்
(2) திட்டமிடுதல்:- நிகழ்கால மற்றும் எதிர்கால போட்டி நிலைமையினை மதிப்பீடு செய்ய முடிதல்
(3) கட்டுப்படுத்தல்:- வேலைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் வளங்களில் இருந்து உச்ச பயனைப் பெறுதல்
(4) நெறிப்படுத்தல்:- வேலைப் பகிர்வினூடாக உருவாகின்ற வேலைச் சிறப்புத் தேர்ச்சி காரணமாக உற்பத்தித் திறனை உயர்த்திக்கொள்ள முடிதல்.
(5) தலைமைத்துவம்:- ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்துக்கொள்ள முடிதல் (.....)

21. பொருள் அல்லது சேவையொன்று பல்வேறுபட்ட முறைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறான உற்பத்தி முறைகளின் அனுகூலமான பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.
A. வாடிக்கையாளர் தேவை விருப்பத்திற்கேற்ப உற்பத்தி இடம்பெறுதல்
B. அலகுக் கிரயம் குறைவு
C. நவீன தொழில்நுட்பங்களை இலகுவாகப் பயன்படுத்த முடிதல்
D. வெளியீட்டில் மாற்றங்களை செய்ய முடிதல்
E. நுகர்வோர் திருப்தியை உயர்ந்த மட்டத்தில் பேண முடிதல்
F. சந்தையில் இடரற்ற நிலைமை காணப்படல்
மேற் குறிப்பிட்டவற்றுள் வேலை உற்பத்தியின் (Job production) அனுகூலமான பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A, B, C (2) A, D, E (3) A, E, F (4) B, C, E (5) B, C (.....)

22. உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் போது கவனம் செலுத்தவேண்டிய காரணி அல்லாதது,
(1) பொருளின் தரம்
(2) வழங்குநரின் நம்பகத்தன்மை
(3) கொடுப்பனவு நிபந்தனை
(4) பொருளைத் திருப்பி அனுப்பும் காலம்
(5) கட்டளைக்காலம்
(.....)

23. தளபாட உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் கிரயங்கள் சில கீழே தரப்படுகின்றன. இவற்றுள் மாறும் கிரயங்களை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) கட்டிட வாடகை, மின்கட்டணம், தொழிற்சாலைக் காப்புறுதி
(2) இறைக்கட்டணம், காவலாளர் சம்பளம், பூச்சிடல் கிரயம்
(3) பலகைக்கான செலவு, மெருகூட்டுதல் செலவு, பூச்சிடல் செலவு
(4) பலகைக்கான செலவு, ஊழியர்களுக்கான கூலி, கட்டிட வாடகை
(5) இறைக் கட்டணம், பலகைக்கான செலவு, மின்கட்டணம் (.....)

24. சரவணன் என்பவர் நகர்ப்புறத்தில் பிரதான பேரூந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்களை விற்பனை செய்து வருகின்றார். அவர் தனது உற்பத்திகளின் சுவை, உடலுக்கு தீங்கு விளைவிக்காத தன்மை, பல்வேறு வகையான பானங்கள் தயாரித்தல் ,தரமான மூலப்பொருட்களைப் பெறுதல் என்பவற்றில் அக்கறை செலுத்தி தரத்தை உயர்த்துவதன் மூலம் இலாபத்தை உச்சப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

மேற்கூறிய விடய ஆய்விலிருந்து வெளிப்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகக் கருதப்படுவது,

(1) உற்பத்தி எண்ணக்கரு
(2) விற்பனை எண்ணக்கரு
(3) வாடிக்கையாளர் எண்ணக்கரு
(4) உற்பத்திப் பொருள் எண்ணக்கரு
(5) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(.....)

25. நுகர்வோர் சந்தைத் துண்டமாக்கலுக்குப் பயன்படுத்தப்படும் அடிப்படைகள் சில கீழே தரப்படுகின்றன. இவற்றுள் நடத்தை ரீதியான காரணிகளை மட்டும் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
(1) நாடுகள், காலநிலைக் காரணி, சனத்தொகை அடர்த்தி
(2) வயது, வருமானம், இனம், சமயம்
(3) சமூக வகுப்பு, வாழ்க்கைப் போக்கு, ஆளுமைத் தன்மை
(4) கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம், பக்கச்சார்பு, பயன்படுத்துவோர் மனப்பாங்கு
(5) வாழ்க்கைப் போக்கு, குடும்பமொன்றின் அளவு, பக்கச்சார்பு (.....)

26. பின்வருவன சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் சில கருவிகள் ஆகும்.

A. உத்தரவாதம்	E. கொடுப்பனவு முறைகள்
B. வழிக்கலவை	F. ஆக்கம்
C. தனிப்பட்ட விற்பனை	G. கடன் நிபந்தனைகள்
D. நேர் சந்தைப்படுத்தல்	H. இடைத்தரகர்

மேற்குறிப்பிட்டவற்றுள் சந்தைப்படுத்தல் மாறியின் இடக்கலவையுடன் மாத்திரம் தொடர்புடைய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) A,C (2) B,D (3) B, H (4) G,H (5) E, F (.....)

27. பின்வரும் இரண்டு கூற்றுக்களையும் கருத்தில் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.

I. எதிர்கால அனுகூலங்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் வணிக நிறுவனமொன்றிற்கு உரிமையாக இருக்கின்ற நிகழ்கால நிதியத்தை வினைதிறன் கொண்டதாக நீண்டகால சொத்துக்களில் அல்லது நீண்டகால செயற்றிட்டங்களில் குறிப்பிட்ட நிதியொன்றில் முதலீடு செய்வதற்கு திட்டமிடல் **மூலதனப் பாதீடு** ஆகும்.

II. குறிப்பிட நிதியாண்டொன்றில் நிறுவனத்திற்கு உண்மையாக அல்லது உத்தேசமாக காசு உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் இடம் பெற்ற முறைகளை பகுப்பாய்வு செய்வது **காசுப் பாதீடு** ஆகும்.

(1) முதலாம் கூற்று சரி இரண்டாவது கூற்று பிழை (4) முதலாம் கூற்று பிழை இரண்டாவது கூற்று சரி
(2) இரண்டு கூற்றுக்களும் சரி (5) இரண்டு கூற்றுக்களும் பிழை
(3) இரண்டு கூற்றுக்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை (.....)

28. பின்வரும் நிதிச்சந்தை வகைகளுள் மூலதனச் சந்தையாகக் கருதப்படுவது,
(1) திறைசேரி உண்டியல் சந்தை
(2) பங்குச் சந்தை
(3) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை
(4) உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி கடன் சந்தை
(5) வணிகப்பத்திரச் சந்தை (.....)

29. பொருளாதாரமொன்றில் நிதித் தீர்மானத்தை நடமுறைப்படுத்துவதற்கு நிதிமுறைமை காணப்படுகிறது. அந்த வகையில் கீழ் குறிப்பிட்டவற்றுள் நிதி உட்கட்டமைப்பு வசதிகளை மட்டும் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) பங்குத்தரகுக் கம்பனிகள், காப்புறுதி கம்பனிகள்
(2) திறைசேரி உண்டியல்கள், வைப்புச் சான்றிதழ்கள்
(3) திறைசேரி முறிகள் சந்தை, வணிகப் பத்திரச் சந்தை
(4) மெய்நேர மொத்த தீர்ப்பனவு முறை, பிரமைப்படுத்திய காசோலை தீர்ப்பனவு முறை (.....)
(5) திறைசேர் உண்டியல்கள், பிரமைப்படுத்திய காசோலை தீர்ப்பனவு முறை

30. பின்வருவனவற்றுள் தொழில் [வேலை] [Job description] விவரணத்தில் காணப்படுவது
(1) கல்வித் தகைமைகள் (4) மனப்பாங்கும் ஈடுபாடும்
(2) அனுபவம் (5) பதவிக்குரிய பணிகள்
(3) நுண்மதி மட்டம் (.....)

❖ **31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.**

31. (அ) தரமான பொருட்கள், சேவைகளைப் பெறுவதில் அக்கறை கொண்ட தரப்பினராக ..... காணப்படுவதுடன், உட்கட்டமைப்பு வசதி, தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கு ..... வணிகத்திற்கு முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகின்றது.

(ஆ) பின்வருவனவற்றில் தாக்கம் செலுத்தும் வணிகச்சூழல் வகையை இடைவெளியில் எழுதுக.

I. பணவீக்கம் .....
II. சமய நம்பிக்கைகள் .....

32. (அ) நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று அடிப்படைகளாக ..... , ... , சமூகம் என்பவை காணப்படுகின்றன.

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் 4 R எண்ணக்கருவின் படி வைக்கோலிலிருந்து கடதாசி உற்பத்தி செய்தல் ..... எனப்படுவதுடன், மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன் வளர்ப்பை மேற்கொள்ளல் ..... எனவும் அழைக்கப்படும்.

33. (அ) அரசின் நிதிக்கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பிரதான கருவியாக ..... காணப்படுவதுடன், வணிக வங்கியில் காணப்படுகின்ற வைப்புகளுக்கமைய மத்திய வங்கியில் பேணவேண்டிய வைப்பின் அளவு ..... ஆகும்.

(ஆ) சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வோர் உரிமைகள் எட்டும் (1)..... , (2) ..... என்பவற்றினால் பிரகடனப்படுத்தப்பட்டவையாகும்.

34. பின்வரும் கூற்றுக்கள் சரியா/ பிழையா என்பதை அவற்றுக்கு எதிரேயுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

A) விசேட அல்லது பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுவதும் சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்து கொண்டதுமான அரசதுறை அமைப்பு கூட்டுத்தாபனம் ஆகும். (.....)

B) நடைமுறையில் காணப்படும் கருத்து அல்லது எண்ணக்கருவிற்கமைய வணிகமொன்றை ஆரம்பிப்பவர் முயற்சியாளர் ஆவார். (.....)

C) பங்கு வழங்கலை மேற்கொள்ளாது அங்கத்தவர்களின் பொறுப்பு அகவிதிச் சட்டகோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைத்தொகைக்கு வரையறுக்கப்பட்ட கம்பனி கரைகடந்த கம்பனிகளாகும். (.....)

D) சிற்றளவு வணிகர் கடன் வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் கடன்திட்டம் சஹன்யா கடன்திட்டம் ஆகும். (.....)

35. (அ) புதிய முயற்சியாளர்களின் வணிக நடவடிக்கைகளுக்காக மூலதனத் தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் நோக்கில் செயற்படும் நிறுவன வகை ..... ஆகும்.

(ஆ) கணக்கொன்று காணப்படுவது கட்டாயமாகக் காணப்படுவது, கணக்கிலுள்ள மீதி வரை மாத்திரமே கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளக் கூடியதான பிரதிகூலங்களைக் கொண்டமைந்த இலத்திரனியல் பணவகை ..... ஆகும்.

36. (அ) கடலாபாயக் காப்புறுதியை (1) ..... (2) ..... என்னும் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.

(ஆ) பின்வரும் தொடர்பாடல் செயன்முறையைப் பூரணப்படுத்துக.

அனுப்புபவர் → ..... → ஊடகம் → .....

↓

துலங்கல் → பின்னூட்டல் ↑

37. (அ) தலைமைத்துவப் பாங்கினை தலைவரின் நடத்தைப்பாங்கிற்கேற்ப (1) ..... (2) ..... என வகைப்படுத்த முடியும்.

(ஆ) நிறுவனமொன்றில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகள், இழப்புக்களை தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடு ..... எனப்படுவதுடன், உற்பத்திச் செயன்முறையின்போது இடம்பெறுகின்ற தரக்கட்டுப்பாடு, சரக்கிருப்புக் கட்டுப்பாடு என்பன ..... ஆகக் கருதப்படும்.

38. (அ) வளங்களை (உள்ளீடுகள்) வெளியீடுகள் என்னும் நிலைக்கு மாற்றும் செயல்முறையானது ..... என அழைக்கப்படுவதோடு, அதன்போது இறுதி வெளியீட்டின் பெறுமதி அதிகரிக்கப்படுவது ..... எனவும் அழைக்கப்படும்.

(ஆ) மறுகட்டளை மட்டம், இழிவு இருப்பு மட்டம் ஆகியவற்றை கணப்பிடும் சூத்திரங்கள் முறையே கீழே தரப்படுகின்றன. அவற்றிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக.

- மறுகட்டளை மட்டம் = ... × உச்ச கட்டளைக் காலம்
- இழிவு இருப்பு மட்டம்= ..... - (சராசரி இருப்பு பயன்பாடு × சராசரி கட்டளைக் காலம்)

39. (அ) அன்றாட நுகர்விற்காகப் பயன்படுத்தப்படும் சவர்க்காரம், பத்திரிகை, பேனை, அரிசி, பாண் என்பன ..... ஆகக் காணப்படுவதுடன், ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்கள், புதிய புத்தகங்கள் என்பன ..... பொருட்களாகக் கருதப்படும்.

(ஆ) வணிகமொன்று தனது உற்பத்திப் பொருட்களுக்கு விலையிடும்போது கிரயம் மற்றும் ..... , ... என்பவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

40. (அ) வரையறுக்கப்பட்ட அழகன் கம்பனியின் 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டில் எடுக்கப்பட்ட சில தகவல்கள் வருமாறு:-

நடைமுறைச் சொத்து-	ரூ 100000	முற்பணமாகச் செலுத்திய செலவுகள்	ரூ 10000
வியாபார வருமதி	ரூ 20000	நடைமுறைப் பொறுப்பு	ரூ 50000
இருப்பு	ரூ 40000		

❖ பின்வருவனவற்றைக் கணிப்பிட்டு இடைவெளியில் குறிப்பிடுக.

(1) நடைமுறைவிகிதம் .....

(2) விரைவு விகிதம் .....

(ஆ) தொழில் பகுப்பாய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவல்கள் (1) .....
(2) ..... தயாரிப்பதற்குத் துணையாக அமைகின்றது.

41. வணிகப் பரம்பலினை படிமுறை ஒழுங்கில் குறிப்பிடுக.

(1) ..... (3) .....

(2) ..... (4) .....

(3) .....

42. நுகர்வோர் பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) .....

(2) .....

(3) .....

(4) .....

43. பணத்தின் கருமங்களைக் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

44. நிறுவனங்களின் தன்மை, உற்பத்திகளின் தன்மை என்பவற்றிற்கமைய பல்வேறுபட்ட வகையிலான போக்குவரத்து, வழங்கல் சேவைகள் காணப்படலாம். அவ்வாறான போக்குவரத்து வழங்கல் சேவைகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

45. முகவர்களை அவர்கள் வழங்கும் சேவைக்கேற்ப வகைப்படுத்திக் காட்டுக.

1. ..... 3. .....
2. ..... 4. .....

46. மையப்படுத்தலின் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

47. இருப்புக் கட்டுப்பாட்டு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ..... 3. .....
2. ..... 4. .....

48. பின்வரும் சின்ன வகைகளுக்கு பொருத்தமான உதாரணங்கள் ஒவ்வொன்று குறிப்பிடுக.

1. தனிப்பட்ட சின்னம் .....
2. குடும்ப சின்னம் .....
3. தேசிய சின்னம் .....
4. பொருள் சின்னம் .....

49. நிதித் தீர்மான வகைகளில் நிதியீட்டல் தீர்மானங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ..... 3. .....
2. ..... 4. .....

50. வெளியகரீதியான ஆட்சேர்ப்பு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ..... 3. .....
2. ..... 4. .....

(2×50=100 புள்ளிகள்)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
பயிற்சிப் பரீட்சை- மார்ச் 2019

தரம் 13 (2019) **வணிகக்கல்வி- 32-T-11** **மூன்று மணித்தியாலம்**

அறிவுறுத்தல்கள்

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

பகுதி 1

வினா இல 01

01. பூம்புகார் என்னும் கிராமத்தில் வசிக்கும் ரமணன், சந்திரா என்ற இரு சகோதரர்கள் இணைந்து கோழிப்பண்ணை வணிகம் ஒன்றை நடாத்துவதுடன், பண்ணையிலிருந்து கிடைக்கப்பெறும் முட்டைகளைப் பயன்படுத்தி சந்திரா சுவையான கேக்குகளை (Cake) தயாரித்து அவற்றை உயர்தரத்துடன் பொதி செய்து வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்து வருகின்றார்.
    a) இச்சம்வத்திலுள்ள வணிகத்தின் மூலம் திருப்தி செய்யப்படும் **மனித தேவை** ஒன்றினையும், **விருப்பம்** ஒன்றினையும் குறிப்பிடுக.
    b) மேற்படி வணிகத்துடன் தொடர்புறும் வகையில் **வணிகத்திற்குரிய பண்புகளைக்** குறிப்பிடுக.
    c) ராமன் சந்திரா வணிகத்துடன் தொடர்புறும் வகையில் மேற்படி வணிகத்தினால் **பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள்** இரண்டு குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

02. a) வணிகங்களில் பெரும்பாலும் பேரினச் சூழல் காரணிகள், அண்மிய சூழல் காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவனூடாக வணிகங்களுக்குள் வாய்ப்புக்களையோ அச்சுறுத்தல்களையோ உருவாக்குகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.
    b) இலங்கை ரூபாவிற்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பதன் காரணமாக மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதற்கான கிரயம் அதிகரிக்கின்றது.
        i. மேலே தரப்பட்ட கூற்றில் காணப்படும் வணிகச்சூழல் காரணி எது?
        ii. நீர் குறிப்பிடும் வணிகச் சூழல் காரணிக்குள் உள்ளடங்கும் வேறு காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

03. பாடசாலையில் காணப்படும் சிற்றுண்டிச்சாலையொன்றின் மீது **அக்கறை காட்டும் நான்கு தரப்பினரைக்** குறிப்பிடுவதுடன், அந்த ஒவ்வொரு தரப்பினரும் அவ்வாறு **அக்கறை காட்டுவதற்கான காரணங்கள்** இரண்டு வீதம் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. a) ஆடை உற்பத்தி தொழிற்சாலையொன்று **மனித வளம் தெடர்பான ஒழுக்கநெறிகளை** பின்பற்றுவதன் மூலம் அடைந்து கொள்ளும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
    b) **நிலைபேறான (Sustainable) சமூக கலாசார அபிவிருத்தியை** அடைவதற்கு வணிகமொன்றினால் எடுக்கக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

05. a) அரசிற்கும், வணிகத்திற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பொன்றை பேணிக்கொள்வதன் அவசியத்தை உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக.
    b) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்கென தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 02

01. a) அரசின் இறைக்கொள்கையானது வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

    b) அண்மைக் காலங்களில் நுகர்வோர் பாதுகாப்பிற்கான தேவை அதிகரித்து வருவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

02. தனியாள் உடைமை வணிகத்தையும், பங்குடைமை வணிகத்தையும், பின்வரும் நியதிகளுக்கமைய ஒப்பிடுக.

நியதிகள்	தனியாள் உடைமை வணிகம்	பங்குடைமை வணிகம்
1. அங்கத்தவர் எண்ணிக்கை 2. பொறுப்புக்கள் 3. தீர்மானமெடுத்தல் 4. கலைத்தல்	....	....

(04 புள்ளிகள்)

03. a) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கமைவாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை பாய்ச்சல்கோட்டு வரைபடம் மூலம் வகைப்படுத்திக் காட்டுக.

    b) இலங்கையில் மிகவும் பிரபல்யமாகக் காணப்பட்ட கூட்டுறவு வணிகம் தற்போது பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. a) "நிச்சயமற்ற நிலைமைகளுக்கு முகம் கொடுப்பது முயற்சியாண்மையாகும்." அந்தவகையில் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் நான்கினைக் குறிப்பிடுக.

    b) ஒரு நாட்டில் முயற்சியாண்மை விருத்தியடைய அவசியமாகக் காணப்படும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

05. a) நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய நடுத்தரளவு வணிகங்களின் பங்களிப்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

    b) சிறிய நடுத்தரளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்காக அரசு எடுத்துவரும் நிதியல்லா ஊக்குவிப்புக்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 03

01. a) சட்டப்பணத்தினால் நிறைவேற்றப்படும் எல்லாத் தொழிற்பாடுகளும் அண்மிய பணத்தினால் நிறைவேற்றப்படுவதில்லை. இக்கூற்றினை விளக்குக.

    b) பின்வருவனவற்றை விளக்குக.

        i. அதே நேர தீர்ப்பனவு முறைமை

        ii. இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை

(04 புள்ளிகள்)

02. a) சிற்றளவு வணிகரான அகமட் என்பவர் தனது வணிகத்தேவைக்காக மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்யத் தீர்மானித்திருக்கும்போது அவரது நண்பரான டேவிட் என்பவர் மோட்டார் வாகனத்தை உடன் காசுக்கு கொள்வனவு செய்வதைவிட குத்தகைக்கு எடுப்பது சிறப்பானது எனக் கூறுகின்றார். டேவிட்டின் இக்கருத்துடன் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்கள் மூன்று தருக.

    b) வங்கிக்கடன், வங்கிமேலதிகப்பற்று ஆகிய இரண்டினையும் வேறுபடுத்தும் அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

03. a) பிரியந்தன் என்பவர் இலங்கைவங்கி மன்னார் நகரக் கிளையில் நடைமுறைக் கணக்கினைப் பேணி வருகின்றார். இவர் தனது கடன்கொடுத்தோரான ராகுலனுக்கு ரூ 75 000 பெறுமதியான காசோலையினை வரைந்து கொடுப்பனவை மேறகொள்கின்றார். மேற்குறித்த தகவலுக்கிணங்க பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

i. காசோலை வரைபவர் (Drawer)

ii. வரையுணி (Drae)

iii. பெறுவோர் (Payee)

b) இலத்திரனியல் பணத்தினூடாக கொடுக்கல்வாங்கலைத் தீர்க்கும்போது தொடர்புபடும் நான்கு கட்சியினரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. a) அருச்சுனன் என்பவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ரூ 1000000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தை அதே பெறுமதிக்கு காப்புறுதி செய்திருந்தார். இவரது மோட்டார் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூ 300000 இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாதையில் நடந்து சென்ற காந்தன் என்பவருக்கும் சிறிய காயங்கள் ஏற்பட்டிருந்தன.

மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி காப்புறுதி தொடர்பில்,

i. முதலாம் தரப்பினரைப் பெயரிடுக.

ii. இரண்டாம் தரப்பினரைப் பெயரிடுக.

iii. மூன்றாம் தரப்பினரைப் பெயரிடுக.

iv. அருச்சுனன் பெற்றுக்கொள்ளக்கூடிய இழப்பீட்டின் பெறுமதியைக் குறிப்பிடுக.

b) வணிகக் கருமங்களை மேற்கொள்ளும்போது வணிகர்கள் பொறுப்புக் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது. பொறுப்புக் காப்புறுதி என்பதனை அறிமுகப்படுத்தி, அதன்கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்தங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

05. a) ஒரு வணிகம் தொடர்பாடலை மேற்கொள்ளும்போது பின்னூட்டலை எதிர்பார்ப்பதற்கான காரணம் யாது?

b) வினைத்திறனான தொடர்பாடலொன்றின் முக்கியத்துவம் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 04

01. a) பெருந்தெரு போக்குவரத்து முறைமை ஒன்றின் செயற்றிறனை அதிகரித்துக்கொள்ள நீர் கூறும் ஆலோசனைகள் நான்கு தருக.

b) போக்குவரத்து வழங்கல் சேவையினது அனுகூலங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

02. உற்பத்திப்பொருளொன்றை உற்பத்தி செய்வதிலிருந்து அதனை நுகர்வோர் கைகளுக்கு கிடைக்கச் செய்வது வரையிலான செயன்முறையில் பெரும்பாலும் இடைநடுவர்களின் உதவி அவசியமாகின்றது. இச்செயன்முறையுடன் தொடர்புடைய இடைநடுவர்களைப் பெயரிட்டு, அவ்வாறு இடைநடுவர்களைப் பயன்படுத்துவதனூடாக உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் கிடைக்கும் அனுகூலங்கள் மூன்று வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

03. a) வெளிநாட்டு வியாபாரத்ததிற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

b) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. கப்பல் தளச்சீட்டு (War fingers Receipt)

ii. இறக்குமதிக்குறிப்பு (Import entry) (04 புள்ளிகள்)

04. a) வெளிநாட்டு வியாபாரத்தில் பணம் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் நான்கினைப் பெயரிடுக.

b) வியாபார வலயம் (Trade Bloc) என்பதனை அறிமுகப்படுத்தி, வியாபார வலயங்களுக்கு மூன்று உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

05. இலங்கையில் வசிக்கும் ரதன் என்பவர் இந்தியாவிலிருந்து பல ரகங்களை கொண்ட புடைவை வகைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்து அதனை இணையத்களம் ஒன்றின் ஊடாக வியாபாரம் செய்வதற்கு விரும்புகின்றார். அதனை ஆரம்பிப்பதன் சாதகமான, பாதகமான தன்மைகள் பற்றி உம்மிடம் ஆலோசனை கேட்கின்றார் எனக்கருதி, இலத்திரனியல் வர்த்தகத்தில் பிரவேசிப்பதால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றி நீர் எவ்வாறு விளக்குவீர் எனக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி 11

வினா இல 05

01. a) " ஒன்றோடொன்று இணைந்த, தொடர்ந்து காணப்படுகின்ற செயற்பாடுகளின் தொகுதி செயன்முறையாகும்" அந்த வகையில் முகாமைத்துவம் செயன்முறையொன்றாகக் கருதப்படுவதற்கான காரணங்களை விளக்குக.

b) முகாமைத்துவமென்பது அமைப்புக்களின் நோக்கங்களை அடைவதற்கு மட்டுமன்றி தனிநபர்களது நோக்கங்களை அடைவதற்கும் தேவையானதாகும். அந்த வகையில் தனிநபர்களது நோக்கங்கள், குறிக்கோளை அடைந்து கொள்ள எவ்வாறு உதவிபுரிகின்றது என்பதைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

02. a) முகாமையாளர் ஒருவரிடம் காணப்படும் திறன்களுக்கும், முகாமை மட்டங்களுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக்.

b) வருண் என்பவர் விசேட வைபவங்களுக்குத் தேவையான அழைப்பிதழ் மற்றும் ஏனைய சுவரொட்டிகள் (Poster) என்பவற்றை அச்சகமொன்றை சிறிதளவில் நடாத்தி வருகின்றார். இவர் தனது அச்சகத்தை நவீனமயப்படுத்த உபகரணத்தொகுதியொன்றினை கொள்வனவு செய்ய தீர்மானிக்கின்றார். இதற்குத் தேவையான நிதித்தேவையினை நிறைவு செய்வதற்கு நிதி நிறுவனமொன்றிலிருந்து கடன் பெறல் அல்லது குத்தகை அடிப்படையில் உபகரணத் தொகுதியைப் பெறல் என்ற இரு மாற்றுவழிகள் காணப்படுகின்றன. இதில் பொருத்தமானதை தெரிவுசெய்ய வருண் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

03. a) புதிதாக வணிகம் ஒன்றை ஆரம்பித்த அருணன் என்பவர் தனது நண்பருடன் உரையாடும்போது வணிகச்சூழலிலுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக வணிகம் தொடர்பாக திட்டமிடல் என்பது பணத்தையும், நேரத்தையும் வீண்விரயமாக்குகின்றது எனக் கூறுகின்றார். வணிகப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர் என்ற வகையில் அருணனுக்கு எவ்வாறு திட்டமிடலின் முக்கியத்துவத்தை விளக்குவீர் என்பதைக் குறிப்பிடுக.

b) நிறுவனமொன்றின் செயற்பாடுகளில் காணக்கூடிய பொதுப்பண்புகளைப் பயன்படுத்தி தொழில்களை தொகுதியாக்கும் செயல்முறை திணைக்களப்படுத்தலாகும். திணைக்களப்படுத்தலின் அடிப்படைகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. a) முறையற்ற குழுக்கள் என்பதனால் கருதப்படுவது யாது?

b) நெறிப்படுத்தல் செயன்முறையில் உள்ளடக்கப்படுகின்ற ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவம் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

05. a) செயன்முறை தள அமைப்பிற்கும் (Process Layout) உற்பத்தி தள அமைப்பிற்கும் (Product Layout) இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

b) சுமன் என்பவர் பிஸ்கட் உற்பத்தியை மேற்கொள்ள விரும்புகின்றார். அவர் அதனை தொகுதி உற்பத்தி முறையிலா, பாய்ச்சல் உற்பத்தி முறையிலா உற்பத்தி செய்வது எனத் தீர்மானிக்க வேண்டிய நிலையிலுள்ளார். அவர் பொருத்தமான உற்பத்தி முறையைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 06

01. X, Y எனும் உற்பத்தி நிறுவனங்கள் இரண்டின் உள்ளீடு மற்றும் வெளியீடுகள் தொடர்பான தரவுகள் வருமாறு:-

	X நிறுவனம்	Y நிறுவனம்
மூலப்பொருள் அலகுகள்	4000	4000
உழைப்பு மணித்தியாலயங்கள்	2000	2000
இயந்திராதிகள்	2000	2000
முடிவுப்பொருள்	10000	12000

a) பின்வருவனவற்றைக் கணிக்க.

i. உழைப்பு உற்பத்திதிறன்

ii. பூரண உற்பத்தி திறன்

b) நிறுவனங்களால் உற்பத்தி திறன் கணிப்பிடப்படுவதன் காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

02. மாயா என்பவர் வீட்டுத்தேவைக்காக கணினி ஒன்றை கொள்வனவு செய்ய விற்பனையகமொன்றுக்கு சென்றபோது விற்பனை ஊழியரால் பின்வருமாறு விளக்கம் கொடுக்கப்பட்டது. எம்மிடம் உலகளவில் பிரபல்யமான கம்பனிகளின் கணினி வகைகள் பல காணப்படுகின்றன. இவற்றிற்கு சர்வதேச ரீதியிலான தரச்சான்றிதழும் பெறப்பட்டுள்ளது. இவை நல்லநிலையில் புதிய நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி நீண்டகாலம் பாதுகாப்பாக பாவிக்ககூடிய நிலையில் உள்ளதுடன், இதற்கு பத்து வருடங்கள் உற்பத்தி பொறுப்பு உத்தரவாதம் ஒன்றும் தரப்படும் எனவும் கூறுகின்றார். மாயா இதற்கு உங்கள் நிறுவனத்திற்கு வருவது நல்ல நம்பிக்கையான பொருள் வாங்கமுடியும் என்பதனால்தான் எனக்கூறி கணினியைக் கொள்வனவு செய்கின்றார்.

மேற்கூறிய கூற்றிற்கமைவாக தரம் என்றால் என்ன? என்பதனை விளக்கி, பொருளொன்றின் தரத்தில் இருக்க வேண்டிய கூறுகள் நான்கினைக் மேற்படி சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

03. a) வணிகமொன்றின் பொருள் இருப்பு குறிப்பிட்ட மட்டத்தை விடக் குறைவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படாதிருக்கின்ற இருப்பு மட்டமே இழிவு இருப்பு மட்டம் எனப்படும். இழிவு இருப்பு மட்டத்தை விடக் களஞ்சியசாலையின் இருப்பு கீழ் நிலைக்குச் செல்லுமாயின் ஏற்படும் பிரதிகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

b) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. கணினியுடன் இணைந்த உற்பத்தி முறை (Computer Intergraded Manufacturing/ CIM)

ii. தரநியமம் (Quality Standards) (04 புள்ளிகள்)

04. a) சந்தைப்படுத்தல் செயன்முறையானது மைய எண்ணக்கருக்களினால் கட்டியெழுப்பப்படுகின்றது. அவற்றில் தேவை, விருப்பம், கேள்வி ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பினை விளக்குக.

b) எமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பல்வேறு உற்பத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் உற்பத்திகளை விரிவான அடிப்படையில் முன்வைக்கமுடியும். பின்வரும் உற்பத்திகளை அவ்வகைப்படுத்தலில் எவ்வகைக்குள் உள்ளடக்க முடியும் என்பதைக் குறிப்பிடுக.

i. மிஸ்டர் பீன் (Mr Bean)

ii. சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

iii. சிகிரியா

iv. செஞ்சிலுவைச் சங்கம் (04 புள்ளிகள்)

05. சுதா என்பவர் வெதுப்பகம் ஒன்றை நடாத்தி வருகின்றார். இவர் பின்வரும் வகையில் வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்கின்றார்.

பாண் வகைகள்	சாதாரண பாண்	துண்டுகளாக்கப்பட்ட பாண்	இனிப்புச் சுவையூட்டிய பாண்	
பணிஷ் வகைகள்	சீனிச் சம்பல் உள்ளடக்கியது	மாஜரின் உள்ளடக்கியது	மரக்கறிகள் உள்ளடக்கியது	அசைவ உணவுகள் உள்ளடக்கியது.
கேக் வகைகள்	அலங்கார கேக் வகைகள்	முட்டை கேக்	மரக்கறி கேக்	

மேற்குறித்த தகவலுக்கமைய பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. உற்பத்திக் கலவை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

ii. உற்பத்தியின் நீளம்(Length)

iii. உற்பத்தியின் அகலம் (Width)

iv. உற்பத்தியின் ஆழம் (Depth)

v. உள்ளடக்கம் (Consistency) (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 07

01. “ அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் சந்தையில் நீண்டகாலம் நிலைத்திருத்தல் என்பது கடினமானதொன்றாகக் காணப்படுகின்றது.” **சந்தையில் நிலைத்திருத்தல்** (Marketing Positioning) என்றால் என்ன என்பதை விளக்கி அவ்வாறு **நிலைத்திருக்கக் கூடிய முறைகள்** யாவை என்பதைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

02. a) வியாபாரக் குறி (Trade mark) என்பதனால் கருதப்படுவது யாது? இதனை இலங்கையில் **எச்சட்டத்தின் கீழ், எங்கே** பதிவு செய்ய வேண்டும்?

b) நிறுவனம் ஒன்றிற்கு மேம்படுத்தல் முக்கியத்துவம் பெறும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

(04 புள்ளிகள்)

03. a) தற்காலத்தில் பொதியிடலானது உற்பத்திப்பொருளுக்கு அத்தியாவசியமானதொரு விடயமாகக் காணப்படுகின்றது. பொதியிடலொன்றைத் திட்டமிடும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

b) **வாடிக்கையாளர் நோக்கில்** சந்தைப்படுத்தல் கலவையின் நான்கு மாறிகளையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

04. அருண் என்பவர் 'ஸ்மார்ட் (Smart) வரையறுத்த பொதுக் கம்பனி' எனும் பெயரில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார். இவர் தனக்கு தேவையான நிதித்தேவை. அதனைப் பெறும் வழிமுறைகள் தொடர்பாக சில ஆலோசனைகளை வழங்குமாறு உம்மிடம் கேட்கின்றார்.

a) அருணின் கம்பனிக்குத் தேவைப்படும் நிதித்தேவைகளை இனங்கண்டு அவற்றை குறுங்கால நிதித்தேவை, நீண்டகால நிதித்தேவை என வகைப்படுத்திக் காட்டுக.

b) அருண் வெளியக மூலங்களில் இருந்து நிதி திரட்டும் வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

05. றெஜி என்பவர் வெளிநாடு ஒன்றில் பணிபுரிந்து பத்து வருடங்களின் பின் நாடு திரும்பியுள்ளார். அவர் தனது உழைப்பான 1000000 ரூபாவை பங்குச்சந்தையில் முதலிட விரும்புகின்றார்.

a) றெஜி இலங்கையில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **நேர் அனுகூலங்கள்** நான்கு தருக.

b) றெஜி பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கலின் செயற்பாட்டுத்தன்மையை பகுப்பாய்வு செய்வதற்கு இலங்கை பங்குச்சந்தையில் அளவிடப்படும் சுட்டிகள் இரண்டின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா இல 08

01. a) மரத்திலான தளபாடங்களை விற்பனை செய்யும் பொது வரையறுத்த கம்பனியொன்று தனது வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு மேலதிக நிதித்தேவை ஒன்றை வேண்டி நிற்கின்றது. மேலதிக நிதியினை உரிமை மூலதனத்தின் ஊடாகவா? கடன் மூலதனத்தின் ஊடாகவா? அல்லது இரண்டினையும் கலந்த முயிலா? பெறுவது என்பது பற்றி கம்பனி தீர்மானிக்க வேண்டியுள்ளது. இந்நிலையின்போது கம்பனியின் நிதிமுகாமையாளர் நீர் எனக் கருதிக் கொண்டு குறிப்பிட்ட நிதித்தேவையினை பூர்த்தி செய்யும்போது எவ்வாறான விடயங்களை கருத்தில் கொள்வீர் என்பதைக் குறிப்பிடுக.

b) நிதி விகிதங்கள் நான்கின் பெயர்களைத் தருக.

(04 புள்ளிகள்)

.

02. இலங்கையின் நிதி முறைமையின் (கட்டமைப்பு) நான்கு கூறுகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு இவ்விரண்டு உதாரணம் தருக.

(04 புள்ளிகள்)

03. a) ஏனைய வளங்களோடு ஒப்பிடும்போது மனிதவளத்திற்கே **உரித்தான பண்புகள்** நான்கு தருக.

b) **தொழில் பகுப்பாய்வு** என்பதனால் கருதப்படுவது யாது?

(04 புள்ளிகள்)

04. நிறுவனமொன்றில் நிதி முகாமையாளர் பதவி வெற்றிடம் ஒன்று காணப்படுகின்றது. இதற்குப் பொருத்தமான நபரை உள்ளிருந்து தெரிவு செய்வதிலும் பார்க்க வெளியிலிருந்து தெரிவு செய்வதே சிறந்தது என முகாமை கருதுகின்றது. இதற்கு **சார்பான, எதிரான** வாதங்களை முன்வைக்க.

(04 புள்ளிகள்)

05. கணக்கு எழுதுநர் பதவியொன்றிற்குப் பொருத்தமான **தொழில் விவரணம்** ஒன்றைத் தயாரிக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

க.பொ.த (உயர் தரம்) பயிற்சிப் பரீட்சை – 2019- மார்ச்

தரம் 13

பாட இலக்கம் 32 **வணிகக்கல்வி**

புள்ளி வழங்கும் திட்டம்

பகுதி 1

விடைகள்

1.	**4**	**16.**	**1**
2.	**3**	**17.**	**2**
3.	**5**	**18.**	**3**
4.	**2**	**19.**	**5**
5.	**1**	**20.**	**2**
6.	**5**	**21.**	**3**
7.	**2**	**22.**	**4**
8.	**5**	**23.**	**3**
9.	**1**	**24.**	**4**
10.	**4**	**25.**	**4**
11.	**2**	**26.**	**3**
12.	**3**	**27.**	**1**
13.	**1**	**28.**	**2**
14.	**2**	**29.**	**4**
15.	**4**	**30.**	**5**

(2×30=60 புள்ளிகள்)

பகுதி 11

31. (அ) வாடிக்கையாளர் அரசு
    (ஆ) பொருளாதாரச் சூழல் சமூக கலாசாரச் சூழல்
32. (அ) சூழல் பொருளாதாரம்
    (ஆ) மீள் சூழற்சி மீள் உருவாக்கல்
33. (அ) வட்டி வீதம் சட்டரீதியான ஒதுக்கம்
    (அ) ஐ.அ. குடியரசின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் எவ் கெனடி சர்வதேச நுகர்வோர்கள்
34. (A) சரி (B) பிழை (C) பிழை (D) சரி
35. (அ) முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள் (ஆ) வரவட்டை
36. (அ) கப்பல் தண்டக் காப்புறுதி(Hull) (2) கப்பல் சரக்குக் காப்புறுதி(Cargo)

    (ஆ) செய்தி பெறுபவர்

37. (அ) செயற்பாடுசார் தலைமைத்துவம்(Task oriented style)

    ஊழியர்சார் தலைமைத்துவம் (Employee oriented style)

    (ஆ) முன்னூட்டல் கட்டுப்பாடு (Feed forward Control)

    செயன்முறைக் கட்டுப்பாடு(Concurrent Control)
38. (அ) நிலைமாற்றல் சேர்க்கப்பட்ட பெறுமதி

    (ஆ) உச்ச இருப்பு பயன்பாடு மறுகட்டளை மட்டம்

39. (அ) வசதிப் பொருட்கள் நாடாப் பொருட்கள்

    (ஆ) போட்டியாளர் விலை கேள்வி

40. (அ) 2:1 1:1

    (ஆ) தொழில் குறித்துரைத்தல் (Job specification)

    தொழில் விபரணம் (Job Discription)

41. 1. பண்டமாற்று 2. பணப்பாவனை
3. கைத்தொழில் புரட்சி 4. தகவல் பொருளாதாரம்

42. 1. அறிவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மை
2. தொடர்ச்சியான பங்களிப்பு
3. சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
4. சூழல் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
5. ஒத்துழைப்பு

43. 1. பரிமாற்று ஊடகமொன்றாகக் கருமமாற்றல் (A medium of exchange)
2. பெறுமதிகளை அளவிடும் அளவீட்டுக் கருவியொன்றாகக் கருமமாற்றல் (Standard of value)
3. பெறுமானத் திரட்டாகக் கருமமாற்றல் (Store of value)
4. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமொன்றாகக் கருமமாற்றுதல் (Differred payment)

44. 1. சமநிறை கொண்ட போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை முறைமை (Balanced logistic System)
2. உற்பத்தி செயன்முறை வரை பாய்தல் சிக்கல் கொண்ட முறைமை
(Heavy inbound Logistic System)
3. உற்பத்தியின் பின்னர் இறுதி நுகர்வோனின் கைக்குக் கிடைக்கச் செய்யும் சிக்கல் நிறைந்த முறைமை
(Heavy out bound Logistic system
4. உற்பத்தி பொருட்களை விநியோகித்த பின்னர் மீள்பாய்ச்சலுடன் கூடிய முறைமை
(Reverse Logistic System)

45. 1. தரகு முகவர்கள் 2. தரகர்கள்
3. காரணிகர்கள் 4. பொறுப்பு முகவர்கள் 5. ஏல விற்பனையாளர்கள்

46. 1. மிக விரைவாகத் தீர்மானமெடுக்க முடிதல்.
2. தீர்மானங்களில் ஒருமைப்பாடு காணப்படல்.
3. கட்டுப்பாட்டுக் கருமங்கள் இலகுவாக அமைதல்.
4. தொடர்பாடல் இலகுவாக அமைதல்.
5. குறைந்த கிரயம்

47. 1. இருப்பு மட்டத்தை உறுதிபப்டுத்தும் முறை (Stock Level Determining System)
2. ABC பகுப்பாய்வு முறை (ABC Analysis)
3. இரட்டைக் கொள்கலன் முறை (Two Bin System)
4. தொடர் இருப்பு அறிக்கைபப்டுத்தும் முறை (Continuous Stock Recording System)
5. கணினி நிகழ்ச்சித் திட்டம் (Computer Program)
6. JIT முறை (JIT Method)

48. தனிப்பட்ட சின்னம்:- அரலிய சீனி, நிபுன அரிசி, விஜய மிளகாய்த்தூள்
குடும்பச் சின்னம் :- MD உற்பத்திகள், ஹரிஸ்சந்திர உற்பத்திகள்
தேசிய சின்னம் :- சிங்கர், Coca Cola
பொருள் சின்னம்:- லிவர் பிரதர்ஸ் உற்பத்தி செய்யும் சன்லைட், லக்ஸ், சிக்னல், அஸ்ரா

49. 1. வியாபாரக் கடன் கொடுநர் தொடர்பான தீர்மானம்
2. வங்கி மேலதிகப் பற்று மற்றும் ஏனைய குறுங்கால வங்கிக் கடன் தொடர்பான தீர்மானம்
3. செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பான தீர்மானம்
4. மூலதனக் கட்டமைப்புத் (மூலதனக் கலவை) தொடர்பான தீர்மானம்
5. பங்குலாபம் தொடர்பான தீர்மானம்

50. ஊடக மூலமான விளம்பரம் (அச்சு / இலத்திரனியல்)
வலைப்பின்னல் / தொழில் வலையமைப்புக்களின் மூலம்
கடந்தகால ஊழியர்கள் மூலம்
கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் மூலம்
தொழில் முகவர் நிறுவனங்கள் மூலம்
தொழிற் சங்கங்கள் மூலம்
தொழிற் சந்தைகள் மூலம்

பகுதி 11

வினா இல 01

1.

a) மனித தேவை- உணவு
மனித விருப்பம்- முட்டை, இறைச்சி, கேக் வகைகள் (2× ½ = 1 புள்ளி)

b) 1. விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்.
2. பொருள்கள் சேவைகளில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்
3. தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்
4. நட்ட இடர் காணப்படல்
5. விருப்பங்களைத் தோற்றுவித்தல்
6. பொருளாதார கருமமொன்றாக இருத்தல் (4× ½ = 2 புள்ளிகள்)

c) 1. மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்
2 புத்துருவாக்கம்
3. தொழில் உருவாக்கம்
4. தேசிய பொருளாதார விருத்தி (2× ½ = 1 புள்ளி)

2. a) 1. சம்பள மட்டம் அதிகரிப்பதன் காரணமாக அண்மிய சூழற்காரணியொன்றாகிய வாடிக்கையாளரின் (நுகர்வோரின்) வருமானம் அதிகரித்துப் பொருட்கள், சேவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும்.
2. பொருள்கள், சேவைகளது விலை மட்டங்கள் அதிகரிப்பதன் காரணமாக வழங்குனர்களால் வழங்கப்படும் பொருள்கள், சேவைகளின் விலைமட்டங்களும் உயர்வடையும்.
(பொருத்தமான இரண்டு உதாரணங்களுக்கு 02 புள்ளிகள்)

b) பொருளாதாரச் சூழல் (01 புள்ளி)
விலை பணவீக்கம் வட்டிவீதம் மொத்தத் தேசிய உற்பத்தி
வேலை வாய்ப்பு வாழ்க்கைச் செலவு வருமானப் பகிர்வின் முரண்பாடு
சேமிப்பு முதலீடு. (2× ½ = 1 புள்ளி)

3. அதிபர் ஆசிரியர்கள்
பாடசாலை அபிவிருத்திக் குழு பெற்றோர்
மாணவர் தொடர்பில் அக்கறை காட்டும் ஏனைய தரப்பினர் (4× ½ = 2 புள்ளிகள்)

- பொருத்தமான அக்கறை காட்டும் காரணங்கள் இரண்டுக்கு (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) 1. தொழில் வழங்குநர், தொழில் பெறுபவர் உரிமை கடமைகளை பாதுகாக்க முடிதல்
2. சாதி, குல, சமய, ஆண், பெண், எனும் வகையில் இடம்பெறும் அசாதாரண நிலைமைகள் இடம்பெறாத வகையில் செயற்படமுடிதல் (2×1=2 புள்ளிகள்)

b) 1. மானிடப் பல்லினத் தன்மைகளுக்கு மதிப்பளித்துக் கருமமாற்றல்
2. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.
3. சமத்துவத்தன்மையுடன் கருமமாற்றுதலும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குதலும்
4. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்குப் பங்களிப்பு செய்தல்.
5. சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பங்களிப்புச் செய்தல்.
6. பல்லினத்தன்மை கொண்ட கலாசாரத்திற்கு மதிப்பளிதத்தலும், அவற்றைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தலும்
7. சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்தல். (4× ½ = 2 புள்ளிகள்)

5. a) வணிகங்களின் விருத்தியினூடாக அரசின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும். அதேபோன்று வணிகவளர்ச்சியின் காரணமாக அரசிற்கு வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வருமானத்தைக் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்யவும், ஏனைய கருமங்களுக்கும் பயன்படுத்த முடியும்.
(வேறு பொருத்தமான உதாரணங்களுக்கும் புள்ளி வழங்கவும்) (02 புள்ளிகள்)

b) 1. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகாரசபை
2. இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம்
3. அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம்
4. மத்திய சூழல் அதிகாரசபை
5. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம்
6. மாவட்ட செயலாளர் அலுவலகம் (4× ½ = 2 புள்ளிகள்)

வினா இல 02


1. a) 1. இறக்குமதிப் பொருள்களுக்குச் சுங்கவரியினை அறவிடுவதன் மூலம் இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படுவதுடன், உள்நாட்டு உற்பத்தியையும் அதிகரித்து உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாக்க முடியும்.
   2. உள்நாட்டு உற்பத்திகளின் மீது வரிகள் அறவிடப்படுவதன் காரணமாக பொருள்கள் சேவைகளின் விலை அதிகரிக்கலாம்.
   3. அரசு உட்கட்டமைப்பு வசதிகளுக்குச் செலவுகள் செய்வதனால் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள இலகுவாக அமையும்.

   b) 1. சந்தையில் பொருள்கள் சேவைகள் பரவலாகக் காணப்படல்.
   2. போட்டித்தன்மை அதிகரித்திருப்பதனால் சந்தையில் மோசடிகள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருத்தல்.
   3. சுதந்திரமான வியாபாரம் காரணமாக சந்தை சிக்கல் கொண்டதாகக் காணப்படல்.
   4. பூகோளமயமாதலுடன் ஏற்படக்கூடிய சமூக கலாசார சீரழிவுகள்
   5. சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்காக நுகர்வோர்களை அறியச் செய்வதற்கும் தேவையானதாக இருத்தல்.

2.

நியதிகள்	**தனியாள் உடைமை**	**பங்குடைமை வணிகம்**
அங்கத்தவர்களின் எண்ணிக்கை பொறுப்புக்கள்	தனியொருவர் தனியாக	குறைந்தது இருவர், கூடியது 20 பேர் பங்காளர்கள் ஒருமைப்பாட்டுடன் பொறுப்பேற்பர்.
தீர்மானமெடுத்தல் கலைத்தல்	சுயாதீனமாக கலைத்தல் இடம் பெறாது விருப்பத்தின் அடிப்படையில் வணிகத்தைக் கலைத்தல்.	ஒருமைப்பாட்டுடன் தீர்மானமெடுப்பர். சுயமாக அல்லது நீதிமன்றத் தீர்ப்பின்படி கலைக்கப்படுதல்
	(4× ½ = 2 புள்ளிகள்)	(4× ½ = 2 புள்ளிகள்)

3. a)



b) **கூட்டுறவின் பின்னடைவிற்கான காரணங்கள்**
   1. திறந்த சந்தை முறைமை
   2. பூகோளமயமாக்கம்
   3. சந்தை போட்டிக்கு முகம் கொடுக்க போதிய நிதிபலமும், முகாமைத்துவ ஆற்றலும் காணப்படாமை
   4. நவீன தொழில்நுட்பம், நவீன முகாமைத்துவ முறைமையை பயன்படுத்தாமை
   5. முதன்மையாக காணப்படும் ஊழல்மோசடிகள்
   6. அரசியல் தலையீடுகள்
   7. முகாமையாளர், ஊழியர் தொடர்பான திறன்களை உருவாக்கத் தவறியமை

8. மக்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் குறைவடைந்தமையும், பொதுமக்கள் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்துவத்தை பெற முன்வராமையும்
9. கூட்டுறவின் பண்புகள் இல்லாமல் போனமை
10. நிதி முறைமைகளுள் பிரவேசிக்கத் தவறியமை (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) **முயற்சியாண்மையின் முக்கியத்துவம்**
   1. வேகமாக மாற்றமடைந்து வருகின்ற உலகின் மாற்றங்களுக்கு எதிர்விளைவை காட்டக்கூடிய **புத்தாக்கங்களை கண்டுபிடிக்கக்கூடிய முயற்சியாளர்களின் தேவை** மிகப் பாரியளவில் காணப்படல்.
   2. போட்டியாளர்களைக் கொண்ட வணிக உலகில் **தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு புத்தாக்கங்களை** உருவாக்குவதன் தேவைப்பாடு காணப்படல்.
   3. மாற்றமடைந்து வரும் உலகிற்கு முயற்சியாளர்களே **தலைமைத்துவத்தை வழங்கக்** கூடியதாக இருப்பதனால் சகல அமைப்புக்களுக்கும் முயற்சியாளர்கள் தேவைப்படல்.
   4. தனிநபர் தேவைகள், விருப்பங்களை உயர்மட்டத்தில் நிறைவு செய்வதன் மூலம் **வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப்** புத்தாக்கம் புனைதலின் தேவைப்பாடு காணப்படல்.
   5. நாளாந்தம் மாற்றமடைந்து வருகின்ற **புதிய தொழினுட்பங்களுக்கேற்ப வணிகக் கருமங்களை விருத்தி** செய்வதற்கான தேவைப்பாடு காணப்படல்.
   6. புதிய வணிகங்களை ஆரம்பிப்பதனூடாகத் **தொழில்களை உருவாக்கக்கூடியதாக இருத்தல்**.

   (4× ½ = 2 புள்ளிகள்)

   b) முயற்சியாண்மை விருத்தியடைய அவசியமான காரணிகள்
   1. விருத்தியடைந்த நிதிச்சந்தை
   2. முயற்சியாண்மைக்கு இணக்கமான சூழ்நிலை (பொருத்தமான வரிக்கொள்கை, சட்டவாக்கங்கள்)
   3. மிக உயர்வான தேசிய கல்வியும், பயிற்சியும் அளிப்பதற்கான நிறுவனங்களும், பயிற்சி வேலைத்திட்டங்களும்
   4. திறந்த சந்தையை சுதந்திமாக இயங்க விடுதல்
   5. புதிய வணிகச்சந்தர்ப்பங்களுக்கான வசதிகள் உள்ள முதலீட்டை ஊக்குவிக்கும் முறையில் வணிகச் சூழலை உருவாக்கல்
   6. அடிக்கட்டமைப்பு வசதிகளை போதியளவில் வழங்குதல்
   7. அரசியல் பொருளாதார உறுதிநிலை
   8. சமாதானத்திற்கான சூழ்நிலை (4× ½ = 2 புள்ளிகள்)

5. **a) நாடொன்றின் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் பங்களிப்பு**
   1. இவ்வணிகங்கள் ஊழியர் உழைப்பு கூடுதல் என்பதனால் கூடுதலான தொழில் வாய்ப்புக்களை வழங்க முடிதல்.
   2. உள்நாட்டு உற்பத்தியின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.
   3. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்.
   4. பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதனால் நகரமயமாக்கம் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் இழிவடைதல்.
   5. வருமானப் பரம்பலின் முரண்பாடுகள் குறைவடைதல்.
   6. பாரிய வணிகங்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள், முடிவுப்பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல்.

   பாரிய வணிகங்கள் ஈடுபடாத வணிகக் கருமங்களில் ஈடுபடுதல் (4× ½ = 2 புள்ளிகள்)

   b) 1. ஆலோசனைச் சேவை
   2. முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
   3. ஆய்வும் தொழில் நுட்பச் சேவைகள்
   4. உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
   5. சந்தை வசதிகளை வழங்கல் / விற்பனை வசதிகள்
   6. சிறந்த சாதனைகளுக்கான பதக்கங்களை வழங்கல் (4× ½ = 2 புள்ளிகள்)

வினா இல 03

1. a) சட்டப்பணம் பின்வரும் கருமங்களை ஆற்றுகின்றது.
   1. பரிமாற்று ஊடகமாகக் தொழிற்படல்
   2. பெறுமதிகளை அளவிடும் அளவீட்டுக் கருவியொன்றாகக் கருமமாற்றுதல்
   3. பெறுமானத் திரட்டொன்றாக தொழிற்படல்
   4. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடமமொன்றாக் கருமமாற்றுதல்

   ஆனால் அண்மிய பணம் பெறுமானத்திரட்டொன்றாக மட்டுமே கருமமாற்றுகின்றது.

   (பூரணமான விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)

   b) 1. **அதே நேர தீர்ப்பனவு முறைமை (RTGS - Real Times Gross Settlement System)**

   இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் பெறுமதி கூடிய கொடுப்பனவுகளைக் காலம் தாழ்த்தாது உயர் தொழினுட்பத்தையும் தர நியமங்களையும் பயன்படுத்தித் தீர்ப்பனவு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள கணினிக் கொடுப்பனவு முறையொன்றாகும். மிகக் குறுகிய காலத்தில் தீர்ப்பனவுகளை மேற்கொள்ள முடிவதால் இது முக்கியமானதாகக் காணப்படுவதுடன் இது நாட்டில் காணப்படுகின்ற பாரிய பெறுமதியுடன் கூடிய ஒரேயொரு உள்நாட்டுக் கொடுப்பனவு முறையாகவும் உள்ளது.

   (01 புள்ளி)

   2. **இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (Sri Lanka Inter - bank Payment System - SLPS)**

   கணினியினைப் பயன்படுத்தி வங்கிகளுக்கிடையில் இடம் பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற முறை இதுவாகும். இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை இலங்கை மத்திய வங்கியும் மற்றும் வணிக வங்கிகளும் இணைந்து மூலதனமிட்டுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா கிளியரிங் (தனிக்) கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

   (01 புள்ளி)

2. a) ஆம் (½ புள்ளி)

   காரணம்:-
   1. கூடிய பெறுமானம் கொண்ட சொத்துக்களை முழுத்தொகையையும் செலுத்தாது பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல்.
   2. குத்தகைக்காகச் செலுத்தப்படும் வாடகையானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்.
   3. இயந்திரம் காலம் கடந்தவையாக மாறும் பொழுது ஏறப்படுகின்ற நட்டத்தையும், மூலதன நட்டங்களையும் தவிர்த்துக் கொள்ளல்.
   4. பாரியளவு தொகையை முதலீடு செய்யாது கூடிய வருமானத்தை ஈட்ட முடிதல்.

   (இவ்வினாவிற்கு இல்லை எனக்கூறி பொருத்தமான நியாயங்களை முன்வைத்தால் புள்ளி வழங்கவும்) (3×½ =1½ புள்ளிகள்)

   b)

வங்கிமேலதிகப் பற்று	வங்கிக்கடன்
1. வங்கி நடைமுறைக்கணக்கிலுள்ள மீதியை விடக் கூடுதலாகக் குறிப்பிட்ட அளவு வரை காசோலை வழங்குவதற்கு வணிக வங்கிகளினால் வழங்கப்படுகின்ற அனுமதியாகும்.	1. குறிப்பிட்ட வட்டி வீதத்தில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டியுடன் மீளச் செலுத்தும் நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து வங்கியொன்றினால் வழங்கப் படுகின்ற பணத் தொகையாகும்.
2. வங்கி மேலதிகப் பற்று வசதியினைப் பெறுவதற்கு நடைமுறைக் கணக்கொன்று கட்டாயமாக இருத்தல் வேண்டும்.	2. வங்கிக் கடனைப் பெற்றுக் கொள்ள நடைமுறைக் கணக்கொன்று தேவையற்றது.

(2×1 = 02 புள்ளிகள்)

3. a) காசோலை வரைபவர்:- பிரியந்தன்
   வரையுணி:- இலங்கை வங்கி
   பெறுவோர்:- ராகுலன் (மூன்று சரியாயின் 2 புள்ளி, இரண்டு சரியாயின் 1 புள்ளி, ஒன்று சரியாயின் ½ புள்ளி)

   b) 1. அட்டையின் உரிமையாளர்
   2. அட்டையினை விநியோகிக்கும் நிறுவனம்
   3. வியாபாரி எனும் விற்பனையாளர்
   4. கடன் அட்டைச் சங்கம் (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) முதலாம் தரப்பினர்:- அருச்சுனன்
இரண்டாம் தரப்பினர்:- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
மூன்றாம் தரப்பினர்:- காந்தன்
இழப்பீட்டுத்தொகை:- ரூ 3000000 (4× ½ = 2 புள்ளிகள்)

b) **பொறுப்புக் காப்புறுதி (The liability Insurance)**
மற்றோர் பிரிவினர்களுக்கு இடம்பெறும் நட்டம் தொடர்பாக ஏற்படும் பொறுப்பினைக் காப்புறுதி செய்வதே **பொறுப்புக் காப்புறுதி** எனப்படும். (01 புள்ளி)
1. பொது (மக்கள்) பொறுப்புக் காப்புறுதி **(General Liability Insurance)**
2. உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி **(Product Liability Insurance)**
3. ஊழியர் பொறுப்புக் காப்புறுதி **(Employer Libility Insurance)**

(2× ½ = 1 புள்ளி)

5. a) தொடர்பாடல் செயற்பாடு முழுமையடைவதற்கு செய்தியைப் பெற்றவர் அந்தச் செய்தியை புரிந்து கொண்டதாக ஏதோ ஒரு முறையில் அறிவிப்புச்செய்தல் வேண்டும். அதாவது எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ உறுதிப்படுத்தல் வேண்டும். இத்தகைய பின்னூட்டல் மூலமே செய்தி சரியான முறையில் கிடைத்துள்ளது என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
(பூரணமான விளக்கத்திற்கு 02 புள்ளி)

b) 1. ஊழியரைத் தூண்டுவதற்கு
2. தீர்மானம் மேற்கொள்வதை துரிதப்படுத்த
3. சந்தையில் மாற்றம் செய்வதற்கு
4. பிழைகளை குறைத்துக் கொள்ள
5. பயனுடைய தொடர்பிணைப்புக்கு
6. ஊழியர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள (4× ½ = 2 புள்ளிகள்)

வினா இல 04

1. a) 1. பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்தல்
2 .பாதைகளை விரிவாக்குதல், நவீனமயப்படுத்தல்
3. சைகை முறைகளை நவீனமயப்படுத்தல்
4. வலு, சக்தி தாராளப்படுத்தல்
5. மாற்று வலுக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல்
6. பிரவேச வழிகளை விரிவாக்குதல்
7. வாகன நிறுத்துமிடங்களை உருவாக்குதல் (4× ½ = 2 புள்ளிகள்)

b) **போக்குவரத்தினதும் வழங்கல் சேவையினதும் அனுகூலங்கள்**
1. உற்பத்திகளைத் தொடர்ச்சியாகச் சந்தைக்கு வழங்குவதன் மூலம் நுகர்வோனின் நம்பிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
2. சகல கருமங்களும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனால் வீணாதல், கிரயமாதல் என்பன குறைவதன் காரணமாகக் கிரயத்தை இழிவுபடுத்திக்கொள்ள முடிதல்.
3. போட்டிக்குச் சிறப்பாக முகங்கொடுக்க முடிதல்.
4. இயந்திர உபகரணங்கள், ஊழியர்கள் சார்பாக ஏற்படும் நேர் செலவுகளை இழிவுபடுத்திக் கொள்ள முடிதல்.
5. உற்பத்திகளின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்ள முடிதல்.
6. மூலப்பொருள் முகாமைத்துவம் நல்ல முறையில் இடம்பெறுவதனால் பிரச்சினைகள் ஏற்படாதிருத்தல்.
7. தொழிலில் தலைவராக உருவாக முடிதல்.

2. a) **இடைநடுவர்கள்**
1. மொத்தவியாபாரி
2. சில்லறை வியாபாரி
3. முகவர்

(மூன்றும் குறிப்பிட 01 புள்ளி, இரண்டு அல்லது ஒன்று குறிப்பிட ½ புள்ளி)

உற்பத்தியாளருக்கான அனுகூலங்கள்
1. உற்பத்தியாளர்களின் தொழிற்பாடுகள் இலகுவாக அமையும்
2. உற்பத்தியாளர்கள் முழுமையாக உற்பத்தி நடவடிக்கையில் கவனம் செலுத்த முடியும்
3. உற்பத்தியாளர் தனது பொருட்களுக்கான விநியோக நடவடிக்கைகளை முறையாக இடம்பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.
4. நிதிப்பிரச்சினைகள் ஏற்படாது (3× ½ = 1½ புள்ளிகள்)

நுகர்வோருக்கான அனுகூலங்கள்

1. பொருட்களை இலகுவாகப் பெறமுடியும்
2. சரியான அளவில், சரியான தரத்தில் பொருட்களை பெறமுடியும்
3. தொடர்சிசியாக பொருட்களை பெற முடியும்
4. கடன்வசதிகளை பெறமுடியும் (3× ½ = 1½ புள்ளிகள்)

3. a) வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்

1. இயற்கை வளங்கள் பகிரப்பட்டுள்ள முறைகளிலுள்ள முரண்பாடுகள்
2. ஒப்பீட்டு ரீதியான கிரய நன்மைகள்
3. சில உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் சில நாடுகளில் சட்டரீதியான ஏகாதிபத்தியம் காணப்படல்
4. பண்ட மேம்பாடு
5. வியாபாரத் தடைகள் குறைவடைதல் (4× ½ = 2 புள்ளிகள்)

b) i) கப்பல் தளச்சீட்டு (Warfingers Receipt)

சுங்தத்திற்குப் பொருள்கள் ஒப்படைக்ப்பட்டதன் பின்னர் அப்பொருள்கள் பொறுப் பேற்கப்பட்டது எனக் குறிப்பிட்டு சுங்கத்தினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணமாகும். (01 புள்ளி)

ii) இறக்குமதிக் குறிப்பு (Import entry)

இறக்குமதியாளர் சார்பாக துறைமுகத்திற்குக் கிடைக்கப் பெற்றிருக்கும் பொருட்கள் தொடர்பான உரிமையை வெளிப்படுத்துவதற்காக இறக்குமதியாளர் அல்லது அவரது பிரதிநிதியின் மூலம் சுங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணத்தையே இது குறிக்கின்றது. சுமைச்சீட்டு அல்லது இன்வொயிஸின் உதவி கொண்டு இவ்வாவணம் தயாரிக்கப்படும். (01 புள்ளி)

4. a) 1. நாணயக்கடிதம்
   2. வங்கி ஆணை
   3. இலத்திரனியல் கொடுப்பனவு முறைகள்:
   4. இணைய வலையமைப்பு முற்செலுத்துகை அட்டை (Internet Pre paid card)
   5. இணைய முற்செலுத்துகை வசதிகள் (Internet Pre paid facility)
   6. இலத்திரனியல் கொடுப்பனவு சேவை நிறுவனங்களினூடாக கொடுப்பனவுகளை செய்தல் (Electronic payment system) (4× ½ = 2 புள்ளிகள்)

b) ஒரு சில நாடுகள் ஒன்றிணைந்து வரி, சுங்கவரி மற்றும் வியாபாரம் தொடர்பான ஒப்பந்தமொன்றை உருவாக்குதல் சுதந்திரமான வியாபாரப் பிரதேசம் வியாபாரவலயம் (Trade Bloc) என்றழைக்கப்படும். வியாபார வலயம், சுதந்திர வியாபாரப் பிரதேசம் வியாபாரக் கூட்டு, வியாபாரச்சங்கங்கள் எனும் பெயர்களினாலும் அழைக்கப்படும். (01 புள்ளி)

வியாபார வலயங்களுக்கான உதாரணங்கள்

ஐரோப்பிய சங்கம் (EU)
ஆசியான் அமைப்பு (ASEAN)
8 நாடுகளின் குழு (G8) (01 புள்ளி)

5. அனுகூலங்கள்

1. வணிக உரிமையாளருக்கு பெரும் விசாலமான சந்தையை அண்மிக்க வாய்ப்புக் கிடைக்கும்.
2. மூடப்படாத சந்தை கிடைக்கும். அதாவது 24 மணிநேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் திறந்த வண்ணமே காணப்படும்.
3. பொருட்கள் திரட்டுதல், விநியோகித்தல் என்பவற்றிற்கான கிரயம் குறையும்.

பிரதிகூலங்கள்

1. கடுமையான போட்டி
2. வெப்தளத்தை உருவாக்க வேண்டிய தேவை
3. உயர்தொழில்நுட்ப அறிவு அவசியம்
4. விசேடமாக போட்டியை எதிர்கொள்ள வெப்தள சந்தைப்படுத்தல் நுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டியிருப்பதுடன், அதற்கான செலவுகளையும் ஏற்க வேண்டியிருத்தல்

(மேற்கூறிய விடயங்களை உள்ளடக்கிய விடைக்கு முழுமையான புள்ளி வழங்கவும்)
(குறைந்தது 3 அனுகூலங்களும், 3 பிரதிகூலங்களும் குறிப்பிடப்படல் வேண்டும்)

பகுதி 11

வினா இல 05

1. a) முகாமைத்துவச் செயன்முறையானது அடிப்படை முகாமைத்துவக் கருமங்கள் நான்கினை உள்ளடக்கிய செயன்முறையொன்றாகும். அதாவது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய நான்கு முகாமைத்துவக் கருமங்களை உள்ளடக்கிய செயன்முறையொன்றாகும். இவை ஒன்றோடு ஒன்று இணைந்த செயற்பாடுகளின் தொகுதியாகக் காணப்படுகின்றது.
(நான்கு முகாமைத்துவக் கருமங்களுக்கிடையிலான தொடர்பை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும். இதற்கு முகாமைத்துவச் செயல்முறைக்குரிய வரைபடத்தினையும் கொண்டு விளக்கங்களை கொடுக்கமுடியும்)

(பூரணமான விடைக்கு 2 புள்ளி)

b) 1. தனிநபர்களது எதிர்பார்ப்புக்களை எதிர்பார்த்த முறையிலேயே நிறைவேற்றிக்கொள்வதற்கு
2. தனிநபர்களின் பொருளாதார நிலைமையினை (வருமானம், செலவுகள்) சிறந்தமுறையில் கட்டுப்படுத்திக்கொள்வதற்கு.
3. நேரத்தை முகாமைத்துவம் செய்வதற்கு.
4. வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு.

(4× ½ = 2 புள்ளிகள்)

2. a) பல்வேறு முகாமைத்துவ மட்டங்களுக்கும் அம்மட்டங்களிலுள்ள முகாமையாளர்களிடம் காணப்பட வேண்டிய திறன்களுக்குமிடையில் உள்ள தொடர்பினை பின்வரும் வகையில் விளங்கப்படுத்தப்படவேண்டும்.

- சகல மட்டத்திலுள்ள முகாமையாளர்களுக்கும் தனி நபர்களுடனும் குழுக்களுடனும் இணைந்து கருமமாற்ற வேண்டி ஏற்படுவதனால் மானுடத்திறன் ஒரே அளவில் முக்கியமானதாகும்.
- அமைப்பொன்றின் ஊழியர்களின் வேலைகளுடன் நேரடியாகத் தொடர்புபடுபவர்கள் கீழ்மட்ட முகாமையாளர்கள் என்பதனால் அவர்களுக்குத் தொழில்நுடப்த்திறன் கூடுதலாகத் தேவைப்படும்.
- சிக்கலான சந்தர்ப்பங்களில் உருவாகின்ற புதிய கருத்துக்ககளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானமெடுத்தல் உயர்மட்ட முகாமையாளர்களினால் மேற்கொள்ளப்படுவதனால் அவர்களுக்கு எண்ணக்கருவாக்கத்திறன் கூடுதலாகத் தேவைப்படும்.
- ஒப்பீட்டு ரீதியில் முகாமைத்துவ மட்டத்திற்கு காணப்படவேண்டிய திறன்கள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் முகாமையாளரொருவரின் வகிபாகத்தின் வெற்றிக்கு இம்மூன்று திறன்களும் அவரிடம் காணப்படல் மிக அத்தியாவசியமான விடயமொன்றாகும். (பூரணமான விடைக்கு 2 புள்ளி)

b) 1. நிறுவனநோக்கம், வளங்களுடன் பொருந்தக் கூடியதன்மை
2. ஏற்றுக்கொள்ளக் கூடியதன்மை
3. நடைமுறைப்படுத்தக் கூடியதன்மை
4. சட்டரீதியானதன்மை (4× ½ = 2 புள்ளிகள்)

3. a) **திட்டமிடலின் முக்கியத்துவம்**
1. எதிர்கால நிச்சயமற்ற நிலைமைகளுக்கும் உறுதியற்ற இயங்குசூழலுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு.
2. பற்றாக்குறையான வளங்களிலிருந்து உச்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு.
3. கட்டுப்பாட்டிற்கான வசதிகளை வழங்குகின்றது.
4. திடட்மிடலின் மூலம் முகாமையாளர்களுக்கு எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
5. ஏனைய முகாமைத்துவக் கருமங்களுக்கு வழிகாட்டுவதற்கும் இணைபாக்கம் செய்வதற்கும் தேவைப்படல்.
6. நிறுவனத்தின் தொடரச்சியான வாழ்தன்மையினையும் விருத்தியையும் உறுதிபடுத்திக் கொள்வதற்கும்
7. நிகழ்கால மற்றும் எதிர்காலப் போட்டி நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கு
8. ஏனைய பிரிவினர்களை ஊக்கப்படுத்துவதற்குக் காரணங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் தேவையாக இருத்தல். (4× ½ = 2 புள்ளிகள்)

b) **திணைக்களப்படுத்தலின் அடிப்படைகள்**
1. தொழிற்பாட்டின் அடிப்படை
2. உற்பத்திப்பொருள் அடிப்படை
3. வாடிக்கையாளர் அடிப்படை
4. புவியியல் அடிப்படை
5. கலப்பு அடிப்படை
6. செயற்பாட்டு அடிப்படை (4× ½ = 2 புள்ளிகள்)

4. a) முறையான அமைப்பினுள் ஒழுங்கமைப்பாகவுள்ள அங்கத்தவர்களிடையே உருவாகின்ற இடைத்தொடர்புகளின் நெருக்கமும் மற்றும் பொதுத் தேவையினை அடிப்படையாகக் கொண்டு தானாக உருவாகுபவை முறையற்ற குழுக்கள் (Informal Groups) எனப்படும். முறையான அமைப்புக்கள் சிலவற்றில் அங்கத்தவர்களும் கூட இதில் உள்ளடக்கி இருப்பர்.

(பூரணமான விடைக்கு 2 புள்ளி)

b) **ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவம்**

1. ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்துக்கொள்ள முடிதல்.
2. சிறந்த தொழில் உறவினை மேம்படுத்தல்.
3. வணிகத்தின் நன்மதிப்பு அதிகரித்தல்.
4. ஊழியர் விலகல் குறைவடைதல்.
5. ஊழியரக்ளின் விசேட திறன்களிலிருந்தும் தேர்ச்சிகளிலிருந்தும் அனுகூலங்க்ளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
6. வளங்களிலிருந்து உச்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
7. நிறுவனதின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடிதல்.
8. திருப்தியுடன்கூடிய ஊழியர் குழுவொன்று உருவாதல்.
9. வள வீண்விரயம் குறைவடைதல்.
10. ஊழியர்கள் நிறுவனத்தை விட்டு விலகிச் செல்லல் தவிர்க்கப்படுவதனால் ஊழியர் புரள்வு குறைவடைதல்.

(4× ½ = 2 புள்ளிகள்)

5. a)

உற்பத்திப் பொருள் தளஅமைப்பு	செய்முறைத் தளஅமைப்பு
1. ஒரு வகையான பொருள் உற்பத்தி செய்யப்படும். 2. பொருள் உற்பத்திக்கான நேரம் குறைவு 3. தளஅமைப்பிற்கான செலவு அதிகம் 4. குறைந்தளவான இடம் தேவை	1. பல்வகைப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். 2. பொருள் உற்பத்திக்கான நேரம் அதிகம் 3. தளஅமைப்பிற்கான செலவு குறைவு 4. பாரியளவு இடம் தேவை

(2×1= 2 புள்ளிகள்

b) **உற்பத்தி முறையொன்றைத் தெரிவு செய்யும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. உற்பத்திப் பொருளின் தன்மை
2. சந்தையின் அளவு
3. பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமும் தேவையான உபகரணங்களும்
4. ஏற்கவேண்டிய கிரயம்
5. கொள்வனவு செய்யும்போக்கு (தொடர்ச்சியானதா/இடைக்கிடையா)
6. வளங்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் வசதி

வினா இல 06

1. a)

	x	y
உழைப்பு உற்பத்தி திறன்	5	6
பூரண உற்பத்தி திறன்	1.25	1.5

(4× ½ = 2 புள்ளிகள்)

b) **உற்பத்தித் திறன் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்**

1. வணிகத்தின் வளங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பாகத் தீர்மானமெடுப்பதற்கு
2. வணிகத்தை விரிவுபடுதல் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கு
3. ஏனைய ஒத்த நிறுவனங்களுடன் உற்பத்தித் திறனை ஒப்பீடு செய்வதற்கு
4. வணிக நிறுவனத்தின் முன்னேற்றத்தினை விளங்கிக்கொள்வதற்கு (4× ½ = 2 புள்ளிகள்)

2. நுகர்வோர் தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொருளொன்றிற்கு அல்லது சேவையொன்றிற்கு இருக்கும் ஆற்றலே தரம் (Quality) ஆகும். (02 புள்ளிகள்)

பொருளொன்றின் தரத்தில் இருக்கவேண்டிய கூறுகள்

1. சிறந்த செயற்பாட்டுத் தன்மை
2. நம்பகத்தன்மை
3. பொருத்தப்பாடுடையதாகவிருத்தல்
4. நீடித்த பாவனை
5. நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல்.
6. பாதுகாப்புத் தன்மை

(4× ½ = 2 புள்ளிகள்)

3. a) **இழிவு இருப்பு மட்டத்தை விடக் களஞ்சியசாலையின் இருப்பு கீழ் நிலைக்குச் செல்லும்போது ஏற்படும் பிரதிகூலங்கள்**

1. உற்பத்திக் கருமங்கள் தொடர்ந்து இடம்பெறாதிருத்தல்.
2. இயந்திராதிகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்தாது விடப்படுவதனால் வணிகத்திற்கு முறையற்ற கிரயமொன்று ஏற்படுதல்
3. ஊழியர்களின் உச்ச சேவையினைப் பெற்றுகொள்ள முடியாததன் காரணமாக வேலை செய்யாத காலம் உயர்வடைதல்.
4. திடீரெனக் கிடைக்கப்பெறும் கட்டளையினைப் பூர்த்தி செய்ய முடியாதிருத்தல்.
5. வணிகத்திற்குக் கட்டளைகள் கிடைக்கப்பெறாமல் விடல். (4× ½ = 2 புள்ளிகள்)

b) **கணனியுடன் இணைந்த உற்பத்தி முறை**

உற்பத்தியினை வடிவமைப்பதற்கும், உற்பத்திச் செயன்முறை முகாமைத்துவத்திற்கும் கணினியைப் பயன்படுததுகின்ற முறையாகும். அதாவது உற்பத்ததிச் செயன்முறையினை விருத்தி செய்தல் கட்டுப்படுத்தல் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கணினித் தொழில்நுட்ப முறையாகும். (01 புள்ளி)

தரநியமம்

தேசிய அல்லது சர்வதேச நியமங்களுக்கமைய உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தர நியமங்கள் பின்பற்றுதல் என்பதன் கருத்தாகும். இதன் மூலம் தரம் தொடர்பாக நுகரவோரது நம்பிக்கையினை வெற்றிகொள்ள முடியும். (01 புள்ளி)

4. a**) தேவைகள் (Needs), விருப்பங்கள் (Wants), கேள்வி (demand) என்பவற்றிற்கு இடையிலான தொடர்பு**

மனிதனிடமுள்ள ஏதேனும் அடிப்படைத் தூண்டுதல் நிலைமையினை நிறைவேற்றுதல் அல்லது மனிதனின் வாழ்தன்மையை உறுதிப்படுத்துவற்காக பிரதானமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமையே தேவை எனலாம்

தேவையொன்றிற்குக் குறித்த பொருள் அல்லது சேவையொன்றுக்கு இருக்கின்ற நாட்டம் அதாவது விருப்பம் அல்லது நபரொருர் தனது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக உற்பத்திப் பொருள்களில் ஈடுபடுதல் விருப்பங்கள் எனப்படும்.

தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏற்படுகின்ற விருப்பங்கள், அத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குள்ள ஆற்றலின் காரணமாகவே கேள்வி ஏற்படுகின்றது. இந்த வகையில் தேவை, விருப்பம், கேள்வி என்பவற்றிற்கிடையில் தொடர்பு காணப்படுகின்றது. (02 புள்ளிகள்)

b) 1. தனிநபர்கள்
2. நிகழ்வுகள்
3. இடம்
4. அமைப்புக்கள் (4× ½ = 2 புள்ளிகள்)

5. **1. உற்பத்திக்கலவை**

எவரேனும் விற்பனையாளரொருவரினால் விற்பதற்கு முன்வைக்கப்படுகின்ற உற்பத்தித் தொகுதியே உற்பத்திக் கலவை எனப்படும். (1½ புள்ளி)

2. உற்பத்தியின் நீளம்:- 10
(பாண்வகை 3, பணிஷ் வகை 4, கேக் வகை 3) (½ புள்ளி)

3. உற்பத்தியின் அகலம்:- 3
(பாண்வகை , பணிஷ் வகை , கேக் வகை) (½ புள்ளி)

4. உற்பத்தியின் ஆழம்:-
பாண்வகை 3, பணிஷ் வகை 4, கேக் வகை 3 (½ புள்ளி)

5. உள்ளடக்கம்
அனைத்து உற்பத்திகளும் வெதுப்பக உற்பத்திகளாகக் காணப்படுகின்றமை (01 புள்ளி)

வினா இல 07

1. சந்தையில் நிலைத்திருத்தல் (Markert positioning) என்பது பொருளொன்று அல்லது சேவையொன்று தொடர்பாக நுகர்வோரின் மனதில் சாதகமான மனப்பாங்கொன்றினைக் கட்டியெழுப்புதலைக் குறிக்கும். ஏதேனும் பொருளொன்றை அல்லது சேவையொன்றை சந்தையில் மிகவும் சிறந்த முறையில் நிலைநிறுத்தச் செய்வதாகும். (02 புள்ளிகள்)

சந்தையில் நிலைத்திருக்கக்கூடிய முறைகள்

1. பொருளினுள் பல்வேறு பண்புகளையும் பயன்களையும் உள்ளடக்குதல்.
2. போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது மிக உயர்வான சேவையொன்றைப் பெற்றுக் கொடுத்தல்.
3. பல்வேறு உபாய முறைகளை பிரயோகித்து வாடிக்கையாளர்களின் உள்ளத்தில் பொருள் அல்லது சேவையை ஆழமாகப் பதியச் செய்தல். (2× 1 = 2 புள்ளிகள்)

2. a) சின்னமொன்றிற்கே உரித்தான அடையாளமானது சின்னக் குறியீடு (Brand Mark) என அழைக்கபப்டும். இது **பதிவு செய்யப்படும்பொழுது வியாபாரக் குறியீடு (Trade Mark)** எனப்படும். (01 புள்ளி)

இலங்கையில் வணிகங்கள் தமது சின்னத்தினை 2003 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்கச் **புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் வியாபாரக் குறியீட்டினைப் பதிவு செய்யும் திணைக்களத்தில்** பதிவு செய்ய வேண்டும். (01 புள்ளி)

b) **வணிகத்திற்கு மேம்படுத்தல் முக்கியத்துவம் பெறும் சந்தர்ப்பங்கள்**

1. புதிய உற்பத்தியொன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு
2. உற்பத்திகளுக்குத் தற்போது சந்தையில் காணப்படுகின்ற கேள்வியை வீழ்ச்சியடையாது பேணிச் செல்வதற்கு.
3. நிறுவனத்தின் பிரதி விம்பத்தை விருத்தி செய்து கொள்வதற்கு
4. போட்டியை எதிர்கொள்வதற்கு
5. இலக்கு வாடிக்கையாளர் உற்பத்தி தொடர்பான தகவல்களை அறியச் செய்வதற்கு

(4× ½ = 2 புள்ளிகள்)

3. **a) பொதியிடலொன்றைத் திட்டமிடும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. உற்பத்திப் பொருளின் தன்மை
2. பொதியிடலின் மூலம் உற்பத்திப் பொருளுக்குக் கிடைக்கும் பயன்கள் .
3. தொழில்நுட்பப் பொருத்தப்பாடு
4. பொதியின் கூறுகள்
5. வியாபாரிக்குள்ள வசதிகள்
6. நுகர்வோருக்குக் கிடைக்கப்பெறும் பயன்களும் வசதிகளும்
7. சூழலை நேசிக்கும் தன்மை
8. பொதியிடலுக்காக ஏற்படும் கிரயம் (4× ½ = 2 புள்ளிகள்)

b) 1. நுகர்வோர் தேவைகளும், விருப்பங்களும்
2. கிரயம்
3. வசதி
4. தொடர்பாடல் (4× ½ = 2 புள்ளிகள்)

4. a)

குறுங்கால நிதித்தேவை	**நீண்டகால நிதித்தேவை**
❖ சம்பளக் கொடுப்பனவு ❖ தொலைபேசிக்கட்டணம் ❖ மின்சாரக்கட்டணம் ❖ விளம்பரச்செலவு ❖ காப்புறுதிக்கட்டணம்	❖ தையல் இயந்திரக்கொள்வனவு ❖ அலுவலக உபகரணக் கொள்வனவு ❖ ஆடைத் தொழிற்சாலைக்கான கட்டிடக் கொள்வனவு

(2× ½ = 1 புள்ளி) (2× ½ = 1 புள்ளி)

b) **வெளியக மூலங்களில் நிதி திரட்டும் வழிமுறைகள்**

1. பங்கு வழங்கல்
2. வங்கிக்கடன் பெறல்
3. குத்தகை
4. வங்கிமேலதிகப்பற்று
5. அடகு வைத்தல்
6. வாடகைக்கொள்வனவு (4× ½ = 2 புள்ளிகள்)

5. a) **நேர் அனுகூலங்கள்**

1. பங்கு இலாபம்
2. வட்டி
3. ஒதுக்கங்களை மூலதனமாக்கல்
4. உரித்து வழங்கல்
5. மூலதன இலாபம் (4× ½ = 2 புள்ளிகள்)

b) 1. அனைத்துப் பங்கு விலைச்சுட்டி (ASPI) All share price Index
2. S & P இலங்கை 20 விலைச்சுட்டி S & P SL 20 Index
3. 3. மொத்த வருமான விலைச்சுட்டி (TRI) Total Return Index (2× 1 = 2 புள்ளிகள்)

வினா இல 8

1. a) **நிதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொழுது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்**
   1. தேவையான நிதியின் அளவு
   2. நிதி தேவைப்படும் காலம்
   3. கிரயம் (நிதியத்தைப் பெற்றுக்கொள்ளலும் அவற்றைப் பராமரித்தலும்)
   4. வணிக அமைப்பின் தன்மை (தனியுடைமை/பங்குடமை/வரையறுக்கப்பட்ட கம்பனி)
   5. வைக்கப்பட வேண்டிய பிணைகள் தொடர்பான விடயம்.
   6. வணிகத்தின் மூலதனக் கட்டமைப்பில் ஏற்படுத்தும் தாக்கம்.
   7. நிதியினை ஈடுபடுத்தும் செயற்றிட்டத்தின் தன்மையும், அதனால் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்களும்.
   8. வணிகத்தின் முகாமைத்துவத்திற்கு ஏற்படும் அழுத்தங்கள் (4× ½ = 2 புள்ளிகள்)

   b) **நிதி விகிதங்கள்**
   1. திரவ விகிதங்கள் (Liquidity Ratios)
   2. இலாபத் தன்மை விகிதங்கள் (Profitability Ratios)
   3. செயற்பாட்டு விகிதங்கள் (Activity Ratios)
   4. இணைப்பு விகிதங்கள் (Leverage Ratios / Gearing Ratios) (4× ½ = 2 புள்ளிகள்)

2. a) 1. **நிதி நிறுவனங்கள்**
   உதாரணம்:- 1. வங்கித்துறை
   2. வைப்புக்களைப் பொறுப்பேற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
   3. ஏனைய விசேட நிதி நிறுவனங்கள்
   4. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

   2. நிதிக்கருவிகள்
   உதாரணம்:- 1. திறைசேரி உணடியல்கள்
   2. சாதாரணபங்குகள்
   3. வணிகப்பத்திரம்
   4. கம்பனித்தொகுதிக்கடன்
   5. திறைசேரி முறிகள்
   6. முன்னுரிமைப்பங்குகள்
   7. வைப்புச்சான்றிதழ்

   3. நிதிச்சந்தை
   உதாரணம்:-1. பணச்சந்தை 2. நிதிச்சந்தை

   4. நிதிஉட்கட்டமைப்பு வசதிகள்
   உதாரணம்:-1. சமகால மெய்நேர மொத்தத் தீர்ப்பனவு முறை
   2. பத்திரங்களற்ற பிணைப் பத்திர தீர்ப்பனவு முறை
   3. பிரமைப்படுததிய காசோலைத் தீர்ப்பனவு முறை
   4. உலகளாவிய வங்கிகளுக் கிடையிலான தொடர்பாடல் சங்கம்
   5. **மத்தியவங்கி**

   (நான்கு கூறுகள் குறிப்பிட 4× ½ = 2 புள்ளிகள்)
   (இரண்டு உதாரணங்கள் குறிப்பிட 8×1/4= 2 புள்ளிகள்)

3. a) **ஏனைய வளங்களுடன் ஒப்பிடும் போது மனிதவளங்களில் காணப்படும் விசேட பண்புகள்**
   1. உயிருள்ள வளமொன்றாக இருத்தல்.
   2. சிந்திப்பதற்கும் மாற்றுச் செயற்பாடுகளைக் காட்டுவதற்கும் முடியுமாக இருத்தல்.
   3. ஏனைய வளங்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
   4. பயிற்சியளிப்பதன் மூலம் பெறுமானத்தை அதிகரிக்க முடிதல்.
   5. குழுவொன்றாகக் கருமமாற்ற முடிதல்.
   6. நடத்தைசார் சிக்கல் தன்மை கொண்டதாலும் எதிர்வுகூற முடியாது போதலும்
   7. ஆக்கபூர்வமான ஆற்றல்களுடன் கூடியதாக இருத்தல். (4× ½ = 2 புள்ளிகள்)

   b) வணிகமொன்றின் தொழில்கள், கடமைகள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாகவும் அத்தொழிலினை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஊழியர்களிடம் இருக்க வேண்டிய தகைமைகள் /பண்புகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படும் முறையான பரிசீலனை அல்லது ஒழுங்குமுறையொன்றே தொழிற்பகுப்பாய்வாகும். (02 புள்ளிகள்)

4. **சார்பானது**

1. நவீன அறிவுள்ள மனிதர்களை ஈர்ப்பு செய்ய முடிதல்
2. அதிகளவானோரை ஈர்க்கக் கூடியதாகவிருத்தல்
3. பதவிக்கு பொருத்தமான நபர்களை இணைத்துக்கொள்ளமுடிதல்
4. பயிற்சி பெற்ற ஊழியர்களை இணைத்துக்கொள்ளமுடிதல் (4× ½ = 2 புள்ளிகள்)

எதிரானது

1. நிறுவனத்தில் இருக்கின்ற ஊழியர்களை ஊக்குவிப்பதில் தடைகள் உருவாதல்
2. ஈர்ப்பிற்கான கிரயம் உயர்வடைதல்
3. ஈர்ப்புச் செய்வதற்கான காலம் அதிகமாகவிருத்தல்
4. தொழில் பெறுநர், தொழில் வழங்குநர்களுக்கிடையேயான தொடர்புகளில் பாதகமான தாக்கம் ஏற்படல்

(4× ½ = 2 புள்ளிகள்)

5. தொழில் விபரணம்

- பதவியின் பெயர்:- கணக்கு எழுதுவினைஞர்
- தரம்:- 111
- தொழில் இலக்கம்:- 125
- நியமனத்தின் தன்மை:- நிரந்தரம்
- தொழில் அமைந்துள்ள துறை/ திணைக்களம்:- நிதிப்பிரிவு
- வகை கூறவேண்டிய அலுவலகர்:- உதவிக்கணக்காளர்
- சம்பள அளவுத்திட்டம்:- 23500×12
- தகுதிகாண்காலம்:- 6 மாதங்கள்
- கடமைகளும் பொறுப்புக்களும்:-
    1. கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்தல்
    2. சில்லறை காசேடு, காசேடு தயாரித்தல்
    3. வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல்
    4. சம்பளப்பட்டியலைத் தயாரித்தல்
- சேவை நிபந்தனைகள்:-
    1. மு.ப 8.30- பி.ப 4.30 வரை வேலை செய்தல்
    2. மேற்குறிப்பிட்ட பணிகள், கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றிற்கு மேலதிகமாக முதல்வரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய பணிகள், கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

(8× ½ = 04புள்ளிகள்)